நாவலர்

# ந.மு.வேங்கடசாமி நாட்டாரின்
## காப்பிய உரைத்திறன்

முனைவர் **பழ. முத்துவீரப்பன்**



பஞ 7190

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் காப்பிய உரைத்திறன்

(அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு)

முனைவர் பழ. முத்துவீரப்பன்
பேராசிரியர் & தலைவர், தமிழியல் துறை
முதன்மையர், இந்திய மொழிப்புலம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-397 - 0

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 354

நூல் : நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் காப்பிய உரைத்திறன்

ஆசிரியர் : முனைவர் பழ. முத்துவீரப்பன்

பதிப்பு : திருவள்ளுவராண்டு 2040, மார்கழி முதற்பதிப்பு - டிசம்பர் 2009

பக்கம் : 62+ 4

அளவு : டெம்மி 1/8

தாள் : டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ

படிகள் : 1200

விலை : உரூ. 50.00

ஒளியச்சு : திருவள்ளுவர் ஆப்செட் பிரிண்டர்ஸ், ஈசுவரி நகர், ம.க.சாலை, தஞ்சாவூர்.

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

வை. கண்ணபுரக்கண்ணன்
எம்.ஏ.,பி.எட்.,எம்.ஃபில்.,
இயக்குநர் (பொ)
பதிப்புத்துறை

அரண்மனை வளாகம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 001.

## பதிப்புரை

இலக்கியங்கள் இன்சுவை பயப்பவை. கற்பார்தம் ஆற்றலுக்கேற்ப நின்று நிலைத்து நீடித்த இன்பம் தருபவை. உரையாசிரியர்களின் உரைகள் அவற்றிற்கு உரைகற்கள். ஒளிந்து கிடக்கும் சொற்பொருள் இன்பங்களை ஒருங்கே வெளிக் கொணர்ந்து இலக்கியத்தையும் இயற்றிய புலவரையும் நம் நெஞ்சில் நிலைநிறுத்திவிடும் ஆற்றல் உரையாசிரியர்களுக்கே உண்டு. அத்தகைய உரையாசிரியர்கள் வரிசையில் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். தமது ஆழ்ந்தகன்ற புலமைத் திறத்தாலும் உரைவளத்தாலும் தமிழிலக் கியங்களுக்கு மெருகூட்டிய தகைமையாளர் அவர். இச்சான்றோர் காப்பியங்களுக்கு - குறிப்பாகச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களுக்கு எழுதியுள்ள உரைகளில் காணக்கிடக்கும் நயங்களை இந்நூல் இனிதே எடுத்துரைக்கிறது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அன்னை அஞ்சுகம் - தந்தை முத்துவேலர் நினைவு அறக்கட்டளை சார்பில் முனைவர் பழ. முத்துவீரப்பன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவே இந்நூல் வடிவம் பெற்றிருக்கிறது.

பொழிவு நூலாக்கம் பெற ஆர்வம் காட்டி ஆற்றுப் படுத்திய மாண்பமை துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன். நூலாசிரியர் முனைவர் பழ.முத்துவீரப்பன் அவர்களுக்கும், முன்னுரை வழங்கியுள்ள இலக்கியத்துறைத் தலைவர், முனைவர் வ. குருநாதன், அட்டைப்பட வடிவு வழங்கிய திரு. சௌத்திரி, கணினியச்சு செய்தளித்த திருவள்ளுவர் அச்சகத்தார், பதிப்புத் துறை - அச்சகப் பணியாளர்கள் ஆகியோருக்கும் நன்றி.

முனைவர் வ. குருநாதன்
பேராசிரியர் மற்றும் தலைவர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010.

# முன்னுரை

அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் நினைவு அறக் கட்டளை நாயகர் - மாண்புமிகு தமிழக முதல்வர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உலகக் கலைப் படைப்பாளி ஆவார். கவிஞர், கதையாசிரியர், நாடக ஆசிரியர், விளக்கவுரையாசிரியர் என்றெல்லாம் விளங்குகின்ற பன்முகப் படைப்பாளியாகிய கலைஞர் அவர்களுக்கு 1990 - ஆம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக் கழகம் மாமன்னன் இராசராசன் பெயரில் அமைந்த படைப் பிலக்கிய விருதினை உவந்தளித்து உயர்ச்சி பெற்றது. அவ்விருதுத் தொகையாகிய ஒரு இலட்சத்து ஒரு ரூபாயினைப் பெற்ற முத்தமிழறிஞர் அவர்கள் அத்தொகை முழுதும் தமிழுக்கே பயன்பட வேண்டும் என்ற உய்ரிய நோக்கத்தில் தம் அருமைப் பெற்றோர் பெயரில் நிறுவிய அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் நினைவு அறக்கட்டளை சார்பில் சொற்பொழிவுகள் இலக்கியத்துறை வாயிலாக ஆண்டுதோறும் இனிதே நிகழ்ந்து வருகின்றன. தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள், தமிழ்த் தென்றல் திரு.வி.க., நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், தமிழறிஞர் கா. சுப்பிரமணியப் பிள்ளை, திராவிட மொழியிய லறிஞர் கால்டுவெல் ஆகிய ஐவரின் தமிழ்த் தொண்டுகள் குறித்த ஆய்வுரைகளாய் நிகழும் இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் அவ்வப்போது நூலாக்கமும் பெற்று வருகின்றன. மறைமலை யடிகளாரைக் குறித்துக் கவிஞர்கோ கோவை இளஞ்சேரனார் ஆற்றிய முதலாய்வுரை, 'தமிழ் மாமலை' எனும் நூலாய் வெளி வந்தது குறிப்பிடத்தக்கது. நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் காப்பிய உரைத்திறன் குறித்த ஆய்வுரை இந்நூலாக இப்போது இனிதே வெளிவருகிறது.

25.03.2008 அன்று தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத் துறையின் சார்பில் நிகழ்ந்த அன்னை அஞ்சுகம் தந்தை

முத்துவேலர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவுகளுள் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் காப்பிய உரைத்திறன் குறித்த ஆய்வுரையை நிகழ்த்தியவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழியல் புலத்தலைவர் பேராசிரியர் பழ. முத்துவீரப்பன் அவர்கள் ஆவார். அன்னார் அருந்தமிழ்ச் செழுங்கலை நியமமாகிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயே பேராசிரியர் செம்மல் வ.சுப. மாணிக்கனார் அவர்கள் துறைத்தலைவராய் வீற்றிருந்து தமிழ்ப்பணி ஆற்றிய காலத்தில் தமிழ் மாணாக்கராய் இருந்து கற்ற தகைமையாளர். பழுத்த தமிழ்ப் புலமை பாலித்த மரபிலே பயின்று பணியாற்றி வரும் இவர் நாவலர் நாட்டாரின் காப்பிய உரைத்திறன்களைப் பொழிந்துள்ள திறன் புதுமை மிக்கது. நாட்டாரின் உரையியல்புகளை முதலில் முன்மொழிந்து அவ்வுரைகளின் சிறப்புக் கூறுகளைப் பின்தொடர்ந்து பேசும் திறன்கள் பெரிதும் உளங்கொளத் தக்கனவாய் உள்ளன. சிலப்பதிகாரத்தில் மாமலர் நெடுங்கண் மாதவி ஆடிய கடவுளர் ஆடல்களைக் குறித்து நாட்டார் அவர்கள் விளக்கியுள்ளவற்றைச் சொற்பொழிவாளர் நிரல்பட எடுத்துக்காட்டும் திறன் நேரிதே அமைந்துள்ளது. காப்பியச் சொல்லாட்சிகள் பலவற்றிற்கும் உரையாளர் நாட்டார் உரைத்துள்ள உரை விளக்கங்கள், நயங்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டி இயம்புகின்ற நுட்பங்கள் பொழிவாளரின் புலமை நாட்டத்தைப் புலப்படுத்துகின்றன.

முன்னை உரையாசிரியர்களின் கருத்துகள் பொருத்த மின்றி அமையும் இடங்களை நாட்டார் தம் உரையில் எடுத்து மறுக்கும் திறன்களையும் உரையாளர் உணர்த்திச் செல்கிறார். கோவலன் மதுரைப் பயணம் புறப்பட்ட நாள் குறித்த அடியார்க்கு நல்லாரின் குறிப்புகளை நாட்டார் அப்படியே ஏற்காமல் இவையெல்லாம் ஆய்ந்து துணிதற்குரியன என்று நயமுற மறுப்பது போன்ற பகுதிகள் எடுத்துக்காட்டப்படுகின்றன. அரும்பதவுரை, அடியார்க்குநல்லாருரை ஆகிய ஈருரைகளுள் ஏற்புடையவற்றைச் சுட்டிக்காட்டும் நாட்டார் உரைமரபும் உணர்த்தப்படுகின்றமை காணலாம். காப்பிய உரைப்பகுதிகளுக்கு இடையில் வரும் இலக்கணக் குறிப்புகள், அணிநலன்கள், மேற்கோள்கள், ஒப்பீடுகள், வேறுபாடுகள், சொற்பொருள்கள் ஆகிய பலவற்றையும் சொற்பொழிவாளர் எடுத்துக்காட்டும் நுட்பமும் பாராட்டத்தகும்.

அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் தொடர்ந்து நிகழ்வதற்கும், நூலுருவாக்கம் பெறுவதற்கும் ஊக்கமளித்து உதவிவரும் மாண்பமை துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு இலக்கியத்துறையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன். நூலை நன்முறையில் பதிப்பித்துள்ள பதிப்புத்துறை இயக்குநர் திரு . வை. கண்ணபுரக்கண்ணன் அவர்களுக்கும், அத்துறை சார்ந்த நண்பர்களுக்கும் நன்றிகள்.

# நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் காப்பிய உரைத்திறன்

அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் நினைவு அறக்கட்டளைப் பொழிவுக்கு அழைத்துச் சிறப்பித்துள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு நெஞ்சார்ந்த நன்றியை முதற்கண் புலப்படுத்திக் கொள்கிறேன். அறக்கட்டளை நிறுவியவர் அருந்தமிழாகரர் கலைஞர். தமிழ்நாட்டின் தலையெழுத்தாய், தமிழினத்தின் கலையெழுத்தாய் இலக்கிய வரலாற்றில் நிலையெழுத்தாய் இருப்பவர். பல்துறைப் படைப்பாளர். கவிஞராய், நாடக ஆசிரியராய், திரைப்பட வசனகர்த்தாவாய், பத்திரிகையாளராய், புதின, சிறுகதை ஆசிரியராய் இவர் தொடாத துறையில்லை. இதனை வியக்காத விழியில்லை. சொல்லாத நாவில்லை. கடிதங்களைக் கலைப்பெட்டகம் ஆக்கியவர். தொல்காப்பியப் பூங்காவாய், சங்கத் தமிழாய், குறளோவியமாய், நெஞ்சுக்கு நீதியாய், சின்னச் சின்ன மலர்களாய்த் தமிழில் பதிந்தவர். 84 வயது இளைஞர். சுருங்கச் சொன்னால் தமிழாய் வாழ்பவர். அவர் நிறுவிய அறக்கட்டளைப் பொழிவில் பேச வாய்ப்பு கிடைத்ததைப் பெரும்பேறாகக் கருதுகிறேன்.

சிவப்பிரகாசம் என்னும் இயற்பெயர் உடைய நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஐயா அவர்கள், நடுக்காவேரியில் முத்துசாமி-தைலம்மாள் இணையரின் புதல்வராக 12.04.1884 இல் பிறந்தவர். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் நான்காம் வகுப்பு வரை படித்தபிறகு தொடக்கநிலை அரசுத் தேர்வில் வெற்றி பெற்றவர். பகலில் உழவுத் தொழிலில் ஈடுபட்டு இரவில் நீதிநூல், சிற்றிலக்கியங்கள், நைடதம், பாரதம், இராமாயணம் பாடம் கேட்டவர். தொடக்கப்பள்ளி மேற்பார்வையாளர் சாமிநாத முதலியார் வழிகாட்ட, மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வு, பிரவேச பண்டிதம், பால பண்டிதம் ஆகிய தேர்வுகளை எழுதித் தங்கப் பதக்கமும் தங்கத் தோடாவும் பெற்றுப் பாண்டித்துரைத் தேவரால் பாராட்டப்பெற்றவர். 35 ஆண்டுகள் ஆசிரியராகப் (அதில் ஏழாண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்) பணியாற்றியவர். ஓய்வு பெற்ற பிறகு கரந்தைத் தமிழ்க் கல்லூரி முதல்வராகத் திகழ்ந்தவர். கட்டுரையாசிரியர், வரலாற்றாசிரியர், இலக்கண ஆசிரியர், உரையாசிரியர் எனப் பல சிறப்புகள் அமைந்தவர். வேளிர் வரலாற்று ஆராய்ச்சி, கள்ளர் சரித்திரம், சோழர் சரித்திரம், கபிலர், நக்கீரர், கண்ணகி வரலாறும் கற்பு மாண்பும், கட்டுரைத் திரட்டு முதலிய நூல்களை எழுதியவர். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி, அகத்தியர் தேவாரத் திரட்டு, திருவிளையாடல் புராணம், அகநானூறு,

தண்டியலங்காரம், சிலப்பதிகாரம், மணிமேகலை (1-26 காதைகள்) ஆகியவற்றுக்கு உரைகள் எழுதியவர். 1940 ஆம் ஆண்டில் சென்னை மாநிலத் தமிழ்ச் சங்கம் நாவலர் பட்டம் தந்து பெருமை கொண்டது. 28.03.1944-இல் புகழுருவானவர்.

இரட்டைக் காப்பியங்களுக்கு, பெரிதும் சிலப்பதிகாரத்திற்கு இவர் எழுதியுள்ள உரைத்திறன் பற்றியது இப்பொழிவு.

உ.வே.சா. அவர்கள் 1892 ஆம் ஆண்டில் சிலப்பதிகாரத்தையும் 1898ஆம் ஆண்டு மணிமேகலையையும் பதிப்பித்தார்கள். நாட்டாரின் சிலப்பதிகார உரை 1942-இல் பாகனேரி அன்பர் மு.கா.சி. விசுவநாதன் செட்டியார் வேண்டுகோளின்படி எழுதி வெளியிடப்பெற்றது. 1963 வரை ஆறு பதிப்புகள் பெற்றது. பின்னர் மணிமேகலை உரை வெளிவந்தது.

சிலப்பதிகார உரை, முகவுரை, இளங்கோவடிகள் வரலாறு, அரும்பத உரையாசிரியர் வரலாறு, அடியார்க்கு நல்லார் வரலாறு என முறைப்பட அமைந்துள்ளது. இரு உரையாசிரியர்களின் இயல்புகளையும் காய்தல் உவத்தல் இன்றி மதிப்பிட்டுள்ளார் நாட்டார். அரங்கேற்று காதையில் உள்ள இசை, நாடகப் பகுதிகளுக்கு அரும்பத உரையாசிரியர் கூறியவற்றை அடியார்க்கு நல்லார் எந்தவித மாற்றமும் இல்லாமல் அப்படியே பின்பற்றி உள்ளார் எனச் சுட்டுகிறார். இருவரும் மாறுபட எழுதியிருக்கும் உரைகளை ஆராயும்போது சில இடங்களில் அரும்பத உரையே பொருத்தம் உடையதாகக் காணப்படுகிறது என்றும் சிலப்பதிகாரம் முழுதுக்கும் ஒருவாறு பொருள் தெரிந்து கொள்ள இவ்வரும்பத உரையே கருவியாயிருந்தது (ப.26) என்றும் குறிப்பிட்டுள்ளார். அரும்பத உரையைப் பெரும்பாலும் தழுவிச் சில இடத்துப் பதவுரையும் சில இடத்துப் பொழிப்புரையுமாகச் சொல்நயம், பொருள்நயம், அணிகளைப் புலப்படுத்தி இலக்கணம், மேற்கோள் காட்டி விரிவாக அமைந்துள்ளது நல்லார் உரை (ப.15) எனப் பாராட்டுகிறார்.

**நாட்டாரின் உரை இயல்புகள்**

1. சொற்களைக் கிடந்தவாறே கொண்டுகூட்டின்றித் தனி மொழியாகவும் தொடர்மொழியாகவும் ஏற்ற பெற்றி எடுத்துரைத்துப் பொருள் கூறப்பெற்றுள்ளது.
2. அரும்பத உரை, அடியார்க்கு நல்லார் கொண்ட பாடம், பொருள் இவற்றில் ஏற்பன சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ளப் பெற்றுள்ளன. காரணம் காட்டி மறுத்தலும் இடம் பெற்றுள்ளது.

3. அவற்றுள் விளக்கம் பெறாதவை இந்நூலில் விளக்கம் பெற்றுள்ளன.
4. இலக்கணங்களும் மேற்கோள்களும் ஆண்டாண்டுக் காட்டப் பெற்றுள்ளன.
(ப. 17) என்று தம் உரையை மதிப்பிட்டுள்ளார் நாட்டார்.

பதிகம், காட்சிக்காதை இரண்டும் வரலாற்று முறையில் மாறுபடாமல் அடியார்க்கு நல்லார் உரைக்கு மாறாக அரும்பத உரையின் கருத்தைத் தழுவிப் பொருள் எழுதப்பட்டுள்ளன. (ப.17)

கடலாடுகாதையில் பதினோராடல் கூறுமிடத்து அவ்வுரைகளால் விளக்கப்படாத இன்றியமையாத பொருள்கள் சில விளக்கப்பட்டுள்ளன.

அரங்கேற்று காதையில் யாழாசிரியன் அமைதி கூறுமிடத்து அப்பகுதியின் பொருள் உணர்ச்சிக்கு இன்றியமையாத தமிழிசை பற்றிய விளக்கம் (பக்.74-80) எழுதப் பட்டுள்ளது என்று தம் உரையின் சில சிறப்புக் கூறுகளையும் சுட்டியுள்ளார் (ப. 17)

## நாட்டார் உரைத்திறன்

1. சிறப்புக் கூறுகள்
2. நயமான உரை
3. இருபொருள் தரும் சிறப்பு
4. உரை மறுப்பு
5. உரை ஏற்பு
6. இலக்கணக்குறிப்பும் அணி விளக்கமும்
7. மேற்கோள் காட்டும் சிறப்பு
8. சொற்பொருள் விளக்கம் தருதல்
9. பாடவேறுபாடு

ஆகிய தலைப்புகளில் விரித்துரைக்கப்படுகிறது.

### 1. சிறப்புக்கூறுகள்

#### 1.1. நூல் எழுந்த வரலாறு பற்றிய விளக்கம்

குன்றக்குறவர் இளங்கோவடிகளை நோக்கி அறிந்தருள என்று கூற செங்குட்டுவன் அதிசயிக்க, சாத்தனார் குறிப்பறிந்து விளைந்ததை எடுத்துரைக்க அடிகள் நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள் என்றார் என்று உரை எழுதியுள்ளார் நல்லார். இக்கருத்து பொருந்தாது எனக் காரணம் காட்டி மறுக்கிறார் நாட்டார்.

1. செங்குட்டுவனுடன் இளங்கோ சென்றிருந்தமைக்குக் காட்சிக் காதையில் குறிப்பு எதுவுமில்லை.
2. குறவர்கள் செங்குட்டுவனிடம் உரைத்ததாகவே குறிப்பு உள்ளது.
3. இளங்கோ, வேண்மாள் எனப் பிரித்துப் பொருள் கொண்டாலும் அடிகள் உடன் சென்றார் என்பதற்குச் சான்று இல்லை.
4. குறவர் அடிகளிடம் கூற, அது கேட்டுச் செங்குட்டுவன் வியப்புற்றான் என்பது பொருந்தாது. எனவே அரும்பத உரையாசிரியர் கூறியிருப்பது போல, குறவர் செங்குட்டுவனிடம் கூறிய பின் குணவாயிற் கோட்டத்திற்கு வந்து அடிகளிடம் கூறினர். அவ்வாறே செங்குட்டுவனைக் கண்டு வந்த சாத்தனார் அடிகளிடம் கூறினார் என்று அரும்பத உரையாசிரியர் ஆய்ந்து கூறியிருப்பதை நாட்டார் ஏற்றுள்ளார் (ப.17).

## 1.2. பதினோராடல்

கடலாடு காதையில் குறிப்பிடப்பட்டுள்ள பதினோராடல் குறித்து நாட்டார் விளக்கியுள்ள சிறப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | கொட்டி | - கொடுவிடையோன் ஆடுவது | - அதற்கு உறுப்பு நான்கு |
| 2. | பாண்டரங்கம் | - முக்கணான் ஆடுவது | - அதற்கு உறுப்பு ஆறு |
| 3 | அல்லியம் | - மாயவன் ஆடுவது | - அதற்கு உறுப்பு ஆறு |
| 4. | மல்லாடல் | - நெடியவன் ஆடுவது | - அதற்கு உறுப்பு ஐந்து |
| 5. | துடியாடல் | - முருகன் ஆடுவது | - அதற்கு உறுப்பு ஐந்து |
| 6. | குடையாடல் | - முருகன் ஆடுவது | - அதற்கு உறுப்பு ஐந்து |
| 7 | குடத்தாடல் | - மாயோன் ஆடுவது | - அதற்கு உறுப்பு ஐந்து |
| 8. | காமனதாடல் | - | - அதற்கு உறுப்பு நான்கு |
| 9. | மாயவன் ஆடல் | - | - அதற்கு உறுப்பு நான்கு |
| 10. | திருமகள் ஆடல் | - | - அதற்கு உறுப்பு இரண்டு |
| 11. | அயிராணி ஆடல்- | | - அதற்கு உறுப்பு ஆறு |

பதினோராடலுள் இறைவன் ஆடிய இரண்டினை முன் வைத்தும், மாயோன் ஆடிய இரண்டினையும், முருகன் ஆடிய இரண்டினையும் முறையே அவற்றின் பின் வைத்தும், வென்றி பற்றி ஆடிய இக்கூத்துக்களின் பின், காமத்தால் சிறைப்பட்ட அநிருத்தனை மீட்டல் காரணமாக மாயோன் ஆடிய விநோதக் கூத்தினையும் அதன்பின் அவன் மகன் காமன் ஆடிய பேடிக் கூத்தினையும், பின்னர்ப் பெண் தெய்வங்களுள்ளே முறையே மாயவளும் திருமகளும் அயிராணியும் ஆடியவற்றையும் வைத்தும் அவரவர் தகுதிக்கும் ஆண்மை பெண்மைகட்கும் கூத்துக்களின் இயல்புக்கும் பொருந்த முறைப்படுத்தியுள்ள இளங்கோ அடிகளின் காப்பியப்புலமை மாண்பு செப்புதற்கரிய தொன்றாம் என்கிறார் நாட்டார். (பக்.145-146)

## 1.3. தமிழிசை குறித்த புதிய கருத்துகள்

தமிழில் இசை என்பது சுரம், இராகம் என்ற இரு பொருளில் மயங்கும். இராகத்திற்கு இசை என்னும் பெயரன்றிப் பண் என்ற பெயரும் உண்டு.

வடமொழியில் சுருதி எனப்படுவது தமிழில் அலகு, மாத்திரை என்று வழங்கப்படும்.

சுரம் என்பதற்கு நரம்பு என்ற பெயரும் பண் என்பதற்கு யாழ் என்ற பெயரும் தமிழில் வழங்கும்.

ஏழிசைகட்கும் தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன பெயர்களாம். ஏழு சுரங்கட்கும் வடமொழியில் சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என்பன பெயர்.

தமிழில் ஏழிசைக்கும் 22 அலகுகள் முறையே 4 4 3 2 4 3 2 = 22. வடமொழியிலும் ஏழு சுரங்கட்கும் 22 சுருதிகளே உள்ளன. அவை 4 3 2 4 4 3 2 = 22

ஏழிசை எனப்படும் சுரங்கள் ஏழினையும் மாற்றும் திறத்தினாலேயே பலவகைப் பண்கள் அல்லது இராகங்கள் உண்டாகின்றன.

குரல் முதலாய ஏழனுள் தாரத்தில் உழையும் உழையிற் குரலும், குரலில் இளியும், இளியில் துத்தமும், துத்தத்தில் விளரியும், விளரியில் கைக்கிளையும் பிறக்கும். இவற்றில் முதலில் தோன்றியது தாரம்.

ஓர் இராகம் அல்லது பண்ணினை உண்டாக்குதற் பொருட்டு முதலில் தொடங்கப்பெறும் சுரம் குரல் என்பதாகும். ஏழு சுரங்களில் எதனையும் குரலாக நிறுத்துதல் உண்டு. அஃதாவது குரலே குரலாகவும் துத்தம் குரலாகவும் கைக்கிளை குரலாகவும் இங்ஙனம் தொடங்கப்பெறும் என்பதாம்.

சுரங்களைக் கொண்டு இசையை எழுப்புவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்ட எழுத்துகள் சரிகமபதநி என்னும் ஏழுமாம். இவ்வெழுத்துகளைச் சட்சம் முதலிய பெயர்களின் முதலெழுத்துகள் என்று கொள்வது பொருந்தாமையால் இவை குறியீடாக அமைத்துக் கொள்ளப் பெற்றனவாதல் வேண்டும். வட நூற்றுறைபோய சிலரும் இங்ஙனம் கருதுவர்.

'ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ' எனும் இவ்வேழெழுத்தும் ஏழிசைக் குரிய எனத் திவாகரம் கூறுதலின் ஆ முதலிய நெட்டுயிர் ஏழனையும் கருவியாகக் கொண்டு பண்டைத் தமிழ் மக்கள் இசை பாடினராதல் வேண்டும்.

தமிழிலே இராகங்கள் பண், திறம் என இருவகைப்படும்.

'நிறை நரம்பிற்றே பண்ணெனல் ஆகும். குறை நரம்பிற்றே திறம் எனப்படுமே' என்னும் திவாகர நூற்பாக்களால் 7 நரம்பானும் இயன்றது பண்ணாம். 6, 5, 4 எனக் குறைந்த நரம்புகளான் இயன்றன திறமாம் என்பது பெறப்படும். திறத்தை மூன்று வகைப்படுத்துப் பண்ணியற்றிறம், திறம், திறத்திறம் என வழங்குதலும் உண்டு. இந்நால்வகை இராகங்களையும் குறிக்கும் வடமொழிப் பெயர்கள் சம்பூரணம், சாடவம், ஔடவம், சதுர்த்தம் என்பன.

தொடர்ந்து ஐந்திணைக்குரிய பண்கள் குறிஞ்சியாழ், பாலையாழ், முல்லையாழ், நெய்தல்யாழ், மருதயாழ் முதலியன குறித்தும் அவற்றுள் நெய்தல் நீங்கிய நாற்பெரும் பண்களும் அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என்ற இனவேறு பாட்டான் பெரும்பண்கள் பதினாறு ஆகும் என்றும் நான்கு பண்களுக்கும் உரிய திறங்கள் இருபத்தொன்று என்றும் இவை முற்கூறிய நான்கு இனங்களால் வேறுபட்டு எண்பத்து நான்கு பண்கள் ஆகும் என்றும் இவ்வாறு பண் பதினாறும் திறம் எண்பத்துநான்கும் நூறு என்னும் தொகையினவாம் என்றும் இவற்றுடன் தாரப் பண்டிறம், பையுள்காஞ்சி, படுமலை என்ற மூன்று திறங்களும் சேர, பண் 103 என்பது பெருவழக்கு என்றும் (பக்.75-79) நாட்டார் விரிவாக விளக்கிச் செல்லும் சிறப்பு பாராட்டத் தக்கதாகும்.

## 2.1. நயவுரை

### 2.1.1 போற்றி என்றது ஏன்?

அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக் கொளல் வேண்டும்
குரவர்பணி யன்றியும் குலப் பிறப்பாட்டியொ(டு)
இரவிடைக் கழிதற் கென் பிழைப் பறியாது
கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி (புறஞ்சேரி, அடி 87 – 92)

குற்றம் நீங்கிய அறிவினையுடைய மேலோய் போற்றுக ...'போற்றி என்றது குரவர் பணி பிழைத்தலானும், கற்புடையளொடு இரவிடை வேற்று நாட்டிற்குச் சேரலானும், யான் இறந்து படுதலானும், நின் புகழ்க்குக் குறையுண்டாகாமற் காக்க என்றபடி (ப. 308) என விளக்கம் தந்துள்ளார்.

எய்தியது உணர்ந்து ஆங்கு
எற்பயந் தோற்கிம் மண்ணுடை முடங்கல்
பொற்புடைத் தாகப் பொருளுரை பொருந்தியது (அடி. 95 – 97)

'நுமக்குச் செய்யும் பணிவிடையை ஒழித்ததன்றி, இக் கற்புடையாளொடு நும்மை விட்டு நீங்கி இரவின்கண் கழிதல் காரணமாக உண்டாய என் பிழையினை உணராது, அப் பிரிவான் ஏற்படும் நும் உள்ளத் தளர்ச்சியைப் போக்குதல் வேண்டும். குற்றம் தீர்ந்த அறிவினையுடைய பெரியோய் போற்றி' எனப் பொருந்தியவாறு உணர்க. பெரியோர்க்குக் காப்பு குறித்துப் போற்றி என்றல் மரபாகலின்' புரையோய் போற்றி என்றான். (ப. 308).

### 2.1.2. கண்ணகியை முற்கூறிய காரணம்

வனசா ரிணியான் மயக்கம் செய்தேன்
புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கும்
என்திறம் உரையா தேக (காடுகாண் அடி – 198 – 200)

தவத்தினும் கற்பு சிறந்ததாகலான் கண்ணகியை முற்கூறினார். இவ்விருவரும் சாயலும் அறனும் உடையாரேனும் தவறு கண்ட வழி வெகுண்டு சபிப்பர் என்று கருதி அவர்க்கு உரையற்க வென இரந்தாள். (ப. 271)

### 2.1.3. மருந்தில்லா நோய்

உண்டாரை வெல் நறா ஊண் ஒளியாப் பாக்கத்துள் உறை ஒன்றின்றித்
தண்டாநோய் மாதர் தலைத்தருதி என்பது யாங்கறிகோம் ஐய
(கானல்வரி, 30, 1-2)

உண்டவர்களைத் தன் கடுமையால் வெல்லும் கள்ளாகிய ஊண் மறையாது வெளிப்படும் பாக்கத்திலே, மருந்து ஒன்றின்றியே அமையாத காமநோயை மாதரிடத்துத் தருகின்றாய் என்பதனை ஐயனே யாங்கள் எங்ஙனம் அறியா நிற்போம் (ப. 181) எனப் பொருள் கூறி, வெல்லுதல் தம் வயம் இழப்பித்தல் எனச் சொற்பொருள் விளக்கம் தந்து,

களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும். (928)

மறைப்பேன் மன் யானிஃ தோர் நோயை இறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும் (1161) (ப. 182)

என்ற குறட்பாக்களையும் மேற்கோள் காட்டுகிறார். இம் மேற்கோள்கள் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளமை காணலாம்.

### 2.1.4. பண்டைத் தமிழரின் வானியல் அறிவு (நாடுகாண்காதை, அடி 102 - 108)

'கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்' என்ற அடிகளுக்கு விளக்கம் தரும்போது பண்டைத் தமிழ் மக்கள் கோட்களின் நிலையிலிருந்து மழை முதலியவற்றை அறியும் குறிநூற் புலமையுடையராயிருந்தனர் என்பது பெறப்படும். கோட்களின் முரணிய நிலையில் உலகின் பிற பகுதிகளில் மழையில்லையாயினும் குடக மலையில் மழை பெய்வதும் காவிரியில் நீர் பெருக்கெடுத்து வருவதும் தப்பா எனக் காவிரியின் சிறப்பு கூறியவாறாயிற்று' என விளக்கியிருப்பது (ப.237) பண்டைத் தமிழ் மக்களின் வானியல் குறித்த அறிவைப் புலப்படுத்துவதாக உள்ளது.

### 2.1.5. ஒருவரை இருமுறை விளிப்பது ஏன்?

நாடுகாண் காதையில் கவுந்தியடிகள் கோவலன் காணாய் என விளித்துப் பின் காதற் கேள்வ என விளிக்கிறார். ஒரே ஆளை இரண்டு முறை விளிப்பது ஏன்? என விடைதருகிறார் நாட்டார்.

முன்னர்க் கோவலன் என விளித்து மீட்டும் ஈண்டு 'காதற்கேள்வ' என விளித்தது முன்னர்க் கூறியன நினக்கும் ஏதம் தருவன; பின்னர்க் கூறுவன நினக்கு எத்தகைய அச்சத்தையும் செய்யாவிடினும், கடைகழிந்தறியா இக்காரிகைக்கு அச்சம் விளைக்கும்; அது நினக்குப் பொறுத்தற்கரியதாகும் என்பது அறிவித்தற்கென்க (ப.237) என்று விளக்கியிருப்பது சிறப்பாக அமைந்துள்ளது.

### 2.1.6. பதியிலார் இல்லம்

சுடுமண் ஏறா வடு நீங்கு சிறப்பின்
முடியர சொடுங்கும் கடிமனை வாழ்க்கை
(ஊர்காண்காதை, அடி 146-147)

'செங்கல் தலையில் ஏறப்படாத, குடிப்பழி நீங்கிய சிறப்பினை உடைய, முடிசூடிய அரசரும் பிறர் அறியாது தங்கியிருத்தற்கு ஏற்ற விளக்கமுற்ற மனையில் வாழ்தலை உடைய' என உரை தந்துள்ளார். இது பதியிலார் தெருவில் உள்ள இல்லம் பற்றியதாகும். (ப. 337)

பதியிலாரில் குடிக் குற்றப்பட்டாரை ஏழு செங்கற் சுமத்தி ஊரைச் சுற்றிவரச் செய்து புறத்து விடுதல் மரபாகலின் அங்ஙனம் குற்றப்படாதவர் என்பார் 'சுடுமண் ஏறா வடுநீங்கு சிறப்பின்' என்றார். இக்கருத்தை விளக்க

சுடுமண் ஏற்றி யாங்குஞ் சூழ்போகி
வடுவொடு வாழும் மடந்தையர் தம்மோடு

எனச் சித்திராபதி வஞ்சினம் கூறும் மணிமேகலை அடிகளைச் சான்று காட்டியுள்ளார். (மணி 18-31-36) இனி 'ஓடு வேயாது பொற்றகடு வேய்ந்த மனை என்றலுமாம்' எனப் பிறிதொரு பொருளும் தருகிறார்.

### 2.1.7. மரப்புணையில் கடந்த காரணம்

பெருந்துறை மருங்கில் பெயரா தாங்கண்
மாதவத் தாட்டியொடு மரப்புணை போகி (புறஞ்சேரி, 178-179)

'ஓடத்தில் பலரும் ஏறுவார் ஆகலான் தாங்கள் மூவரும் தனியே கட்டுமரப் புணையில் சேர்ந்தனர் என்க. என்னை? முன்னர் வம்பப்பரத்தை வறுமொழியாளனொடு சாபமுறுதலின்' (ப.316) எனப் பொருத்தம் காட்டியுள்ளார்.

முன்பு காவிரியைக் கடக்கும்போது பொதுத்துறையில் ஓடம் ஏறித் தாண்டி வந்ததனால்தான் வம்பப்பரத்தன் வறுமொழிக்கு ஆளாக நேரிட்டது என்பதை உணர்ந்து அதைத் தவிர்த்துக் கட்டு மரத்தில் யாரும் இல்லாப் பகுதியில் கடந்தனர் என்று விளக்கியுள்ளார் நாட்டார்.

## 2.1.8. மண் குளிரச் செய்தல்

மண்குளிரச் செய்யும் மறவேல் நெடுந்தகை (ஊர் சூழ்வரி, அடி 21)

'நிலவுலகினைக் குளிரச் செய்யும் மறம் பொருந்திய வேலையுடைய சிறந்த தகுதியை உடையானது' என உரை எழுதியுள்ளார். மண் குளிரச் செய்தலாவது மன்பதை துன்புறாமல் காத்தல் என விளக்கி

மண் குளிர் கொள்ளக் காக்கும்
மரபொழிந் தரசர் தங்கள்
விண்குளிர் கொள்ள ஓங்கும்
வெண்குடை வெதும்பு மாயின்
கண்குளிர் கொள்ளப் பூக்கும்
கடிகயத் தடமும் காவும்
தண்குளிர் கொள்ளு மேனும்
தான்மிக வெதும்பு மன்றே (சூளாமணி – மந்திரசாலை 26)

எனப் பொருத்தமான மேற்கோள் காட்டியுள்ளார். நாட்டாரில் மட்டுமே இது காணப்படுகின்றது.

## 2.1.9. நாள்விலைக்கிளை (நீர்ப்படைக்காதை, அடி 29)

நாள்விலைக்கிளை என்னும் தொடருக்குத் தம் வாழ்நாளை விலையாகத் தரும் மறவர் என்கிறார். அரசன் அளித்த செஞ்சோற்றுக்கும் (ப. 562) சிறப்புக்கும் விலையாகத் தம் வாழ்நாளைத் தரும் மறவர் என மேலும் விளக்குகிறார். இத் தொடருக்கு நாட்டார் மட்டுமே விளக்கம் அளித்துள்ளார். பின்னர் உரை எழுதிய பெருமழைப்புலவர், தம்வாழ்நாளைப் புகழுக்கு விலையாகக் கொடுக்கின்ற மறவர் என்கிறார். நாட்டார் உரையே சிறப்புடையதாகத் தோன்றுகிறது.

## 2.1.10. படைத்துக் கோட் பெயர்கள்

மாதரி குரவையாடும் பெண்களுக்கு ஏழு நரம்புகளின் பெயர்களை இட்டு வைத்து நிற்க வைக்கிறாள். பன்னிரு இராசிகளில் இடபம், கடகம், சிங்கம்,

துலாம், தனுசு, கும்பம், மீனம் என்னும் ஏழினும் குரல் முதலாய ஏழும் நிற்பது ஒருமுறை.

துலாம், தனுசு, கும்பம், மீனம், இடபம், கடகம், சிங்கம் என்னும் ஏழினும் குரல் முதலாய ஏழும் முறையே நிற்பது மற்றொரு முறை.

'குரவையில் இவ்விரு முறையானும் எழுவரும் நின்று கைகோத்துப் பாடுகின்றனர் ஆகலின் ஒருகால் இடத்தில் நின்றவர் மற்றொரு கால் வலத்திலும், வலத்தில் நின்றவர் இடத்திலுமாக மாறி நிற்றல் இயல்பு. பின்வரும் சக்கரங்களில் இது தோன்றும்' என்கிறார் (ஆனால் உரையில் சக்கரங்கள் எதுவும் இடம் பெறவில்லை). ஏழ் நரம்புகளில் முதலில் தோன்றியது தாரம்; தாரத்தில் உழையும், உழையிற் குரலும், குரலுள் இளியும், இளியுள் துத்தமும், துத்தத்துள் விளரியும், விளரியுட் கைக்கிளையும் பிறக்கும் என விளக்கிச் செல்கிறார். (பக். 401 - 402)

## 2.1.11. ஐம்பெரும் வேள்வி (கட்டுரை காதை, அடி 69-70)

ஐம்பெரும் வேள்வியும் செய்தொழில் ஓம்பும்
அறுதொழில் அந்தணர்

என்ற அடிகளுக்கு விளக்கம் தரும்போது, ஐம்பெருவேள்வி

1. கடவுள் வேள்வி 2. பிரம்மவேள்வி 3. பூத வேள்வி
4. மானிட வேள்வி 5. தென்புலத்தார் வேள்வி (ப. 476)

என்கிறார். இவ்விளக்கம் நாட்டார் உரையில் மட்டுமே உள்ளது.

## 2.1.12. தவமறைந்து

தவமறைந் தொழுகும் தன்மை யிலாளர் (இந்திரவிழா, அடி 128)

தவவேடத்தில் மறைந்து நின்று கூடா ஒழுக்கத்தில் ஒழுகும் தவத் தன்மையில்லாதவரும் (ப. 121) என உரை விளக்கம் அளித்துள்ளார். தவவேடம் மறைதற்கே இடமாயிற் றென்பா,தவ மறைந்து என்றார். (தன்மை - தவத்திற்குரிய இயல்பு; நற்பண்புமாம்) என நயம் காட்டுகிறார். (ப. 121)

## 2.1.13. கோவலனும் தென்றலும்

குரல்வாய்ப் பாணரொடு - நகரப் பரத்தரொடு
திரிதரு மரபிற் கோவலன் போல
இளிவாய் வண்டினொடு இன்னிள வேனிலொடு
மலய மாருதம் திரிதரு மறுகு (இந்திரவிழா, 200 - 203)

பாணர்க்கு - வண்டு

பரத்தர்க்கு - வேனில்

கோவலனுக்கு - தென்றல்

'அடிகள் இவ்வுவமம் வாயிலாகக் காமத்தாற் கோவலன் எய்திய சிறுமையை அங்கை நெல்லியென விளக்கியுள்ளார். பாணர் முதலிய மூவரோடும் வண்டு முதலிய மூன்றற்கும் உள்ள ஒத்த பண்புகளை அறிந்து உவமங் கூறிய திறப்பாடு பெரிதும் பாராட்டற்குரியதாகும். பாடுதலும் கள்ளுண்டலும் பாணர்க்கும் வண்டுக்கும் ஒத்த பண்பு; கோவலன் பரத்தர் பற்றுக்கோடாகப் பாணரொடும் திரிதல் போல (ப. 127) மாருதம் இளவேனில் பற்றுக்கோடாக வண்டொடும் திரியா நின்றது' என எளிமையாக விளக்கியுள்ளார்.

## 2.1.14. வாரணம் ('வைகறை யாமம் வாரணம் காட்ட' கடலாடு காதை, அடி 116)

வைகறையாகிய யாமம் என்க. வாரணம் – கோழி, சங்கு ; இவ்வடிகளை விளக்கும்போது கோழியின் குரலும் சங்கின் முழக்கமும் வைகறையில் எழுவன (ப. 151) என்கிறார்.

## 2.1.15. வெள்வேல் (வெள்வேல் அல்ல வெய்ய வெய்ய) (கானல் வரி, பாடல் 22 (3,4)

வெள்வேல் மாற்றாரை எறிந்து குருதிக்கறை பற்றாத வேல். வடிவு பற்றி வெள்வேல் என்ன வேண்டா; இவை மிகக் கொடியன என்க (ப. 178) என்கிறார்.

## 2.1.16. நீணில விளக்கு

நாணின் பாவாய் நீணில விளக்கே (கொலைக்கள, 90) என்ற அடிக்கு 'பெரிய இவ்வுலகிற்கு விளக்கமாக அமைந்தாய்' என்று உரை எழுதி, விளக்கத்தில் நீணில விளக்கு என்பதனை உவமையாக்கி, நிலத்தின் விளக்காகிய ஞாயிற்றினையும் திங்களினையும் விளக்கத்தால் ஒப்பாய் (ப. 382) எனலும் அமையும் என்கிறார்.

## 2.1.17. பொய்யாக் குலக்கொடி

புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை என்னும் பொய்யாக் குலக்கொடி (புறஞ்சேரி, 169 – 170)

என்ற அடிகளை விளக்கும்போது இருபத்தாறு பரிபாட்டுக்களானும் பிறவற்றானும் சிறப்பிக்கப் பெற்றமையின் புலவர் நாவிற் பொருந்திய என்றும், செல்வம் அளித்தலின் பூங்கொடி என்றும், எஞ்ஞான்றும் பாண்டியர்க்கு உரியதாதலின் பொய்யாக் குலக்கொடி என்றும் கூறினார். (ப. 315)

2.1.18. என்கிறார்

உம்மை வினைவந் துருத்த காலை
செம்மை இலோர்க்குச் செய்தவம் உதவாது (கட்டுரை , 171 – 172)

என்ற அடிகளை விளக்கும்போது ஒருவன் செய்த நல்வினை, தீவினைகள் தம் பயனை நுகர்விக்குங்கால் தம்முள் ஒன்று நிற்கும்போது மற்றொன்று நில்லாது; தனித்தனியே நின்று நுகர்விக்கும் என்பது கருத்து என்கிறார் நாட்டார். (ப. 484)

2.1.19 நிறம்

நிறம்சிதை கவயமொடு நிறப் புண் கூர்ந்து (நீர்ப்படை, 41)

என்ற அடிக்கு உருச்சிதைந்த கவசத்தோடே மார்பின்கண் புண் மிகப்பெற்று எனப் பொருள் தந்து (நிறம் இரண்டனுள் முன்னது வடிவு ; பின்னது மரபு) என விளக்கியுள்ளார். (ப. 564)

2.1.20 ஒருமைப்பாடு உணர்த்துதல்

வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த சந்தனம் மறுக (அந்திமாலை, அடி 37 – 38)

என்ற அடிகளின் விளக்கவுரையில் மக்கள் வாழ்க்கைக்கு மேற்றிசைப் பொருளும் கீழ்த்திசைப் பொருளும் ஒன்று சேர்தலும், வடதிசைப் பொருளும், தென்திசைப் பொருளும் ஒன்று சேர்தலும் வேண்டும் என்பது இவற்றால் பெறப்படுதலின் பல தேயத்தாரும் ஒற்றுமையுடன் வாணிகம் நடாத்துதலின் இன்றியமையாமை புலனாம். (ப. 961)

2.1.21 சிவன், மாயன் பெருமை கொற்றவைக்கு

வேட்டுவ வரியில் கொற்றவையைப் பரவுதல் குறித்து விளக்கும்போது கொற்றவை இறைவனுக்குக் கிரியாசக்தி ஆகலின் நுதல்விழி, கறைமிடறு, புலியுரி, சூலம் முதலிய கோலங்களும் தங்கையாகலின் அவன் செய்கையாகிய மருதின் நடந்ததும் சகடம் உதைத்ததும் சார்த்தி உரைக்கப்பட்டன (ப.294) என விளக்கியிருப்பது கருதத்தக்கது.

### 2.1.21 மகட்பாற் காஞ்சி

தென்திசை என்றன் வஞ்சியொடு வடதிசை
நின்றெதிர் ஊன்றிய நீள்பெருங் காஞ்சியும்
(சிலம்பு) காட்சிக் காதை, அடி 135-136)

என்ற அடிகளின் விளக்கத்தில் ஒருவற்கு மகளைக் கொடுக்க மறுப்பது மகட்பாற் காஞ்சி (தொல், வெண்பா மாலை), உமையை இறைவனுக்கு அளித்தது மகட்பாற் காஞ்சியாகுமா? என வினா எழுப்பி இறைவற்கு இனியனாய் அளித்தான் என்ற பொருள் கொண்டு மகட்டருகென்று மேல்வந்தாற்கு அளித்திலன் (ப.521) என்னும் எதிர்மறைப் பொருள் பற்றி மகட்பாற் காஞ்சி ஆயிற்று என விளக்கம் தருகிறார் நாட்டார்.

### 2.2.1. மணிமேகலை-மலர்வனம் புக்க காதை

மாமலர் நாற்றம்போல் மணிமே கலைக்கு
ஏது நிகழ்ச்சி எதிர்ந்துள தாதலின் (அடி. 3-4)

என்ற அடிகளை விளக்கும்போது தன்மங்களாகிய காரணங்கள் தத்தம் பயனைக் கொடுத்தற்குத் தோன்றுதலை ஏது நிகழ்ச்சி என்பது பௌத்த நூல் வழக்கு. இதனை 'ஹேதுப்ரபவ தர்மம்' என்பர் என்கிறார் உ.வே.சா.ஏது நிகழ்ச்சி மலர் நாற்றம் போல் தோன்றி எதிர்ந்துளதாதலின் என இயைக்க என்பார் அவர். மாமலர் நாற்றம்போல் என்ற உவமையால் நல்வினை பயன் அளித்தற்கு எதிர்ந்துள்ளது என்பது பெற்றாம். மலரின் கண் நாற்றம் அடங்கியிருந்து பின் வெளிப்படுதல் போல கன்மமும் மறைந்திருந்து பயன் அளிக்கும் காலம் வந்துழி வெளிப்படும் என்க (ப.37) என விரித்து விளக்கியுள்ளார் நாட்டார்.

### 2.2.2.

ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ
பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின் (காதை3 அடி 24-25)

என்ற அடிகளை விளக்கும் போது ஆடவர் என்றது ஈண்டு இன்பத்துறை நிற்பாரைக் கருதிற்று. பேடியர் பெண்ணின்பம் துய்க்கும் தகுதியில்லாதவர் (ப.39) என்று விளக்கியிருப்பது சிறப்பாகும்.

### 2.2.3. பாத்திரம் பெற்ற காதை

அறங்கரியாக அருள் சுரந்தூட்டும் (அடி.120)

என்ற அடியை விளக்கும்போது அருளாவது ஒன்றின் துயர் கண்ட வழி வேறு காரணமின்றித் தோன்றும் இரக்கம் என்கிறார் (ப.159) நாட்டார். தொடர்பில்லாதார் மாட்டுத் தோன்றுவது என்பார் பரிமேலழகர்.

2.2.4.

அந்தணன் ஒருவன் கூற்றைக் கேட்டு விசாகையை மணம் புரியும் கருத்துடன் வந்தான் தருமதத்தன். அவனை ஊனில்லான் என்று விளிக்கிறாள் விசாகை. அறுபது ஆண்டு ஆகித் தலை நரைத்த பின்னும் மனம் நெகிழ்ந்து மணத்தை விரும்பினமையால் விசாகை அவனை ஊனில்லான் என்று விளிப்பாள் ஆகினாள். ஊன்-ஊக்கம், மன உறுதி என்கிறார் நாட்டார்.

### 3.1. இரு பொருள் கூறல் (சிலப்பதிகாரம்)

#### 3.1.1. அரும் பொருள்

ஆடிய கொள்கையின் அரும் பொருள் கேடுற

(பதிகம், 161 ஆம் அடி)

என்ற தொடரில் அரும்பொருள் கேடுற என்பதற்குப் பெறுதற்கரிய பொருள் தொலைதலின் என்று பொருள் தருகிறார். பின்னர் அரும் பொருள்- அளத்தற்கரிய பொருள் என்றும் அறனும் இன்பமும் பயக்கும் பொருள் என்றும் கூறுதலுமாம் என்கிறார் (ப.7)

#### 3.1.2. சில்லரிச் சிலம்பு (பதிகம் 25)

சில்லரிச் சிலம்பு என்ற பகுதிக்குச் சில்லரிச் சிலம்பினை - சிலவாகிய அரியினை உடைய சிலம்பினை எனப் பொருள் தந்து, பின்னர் சிலவாகிய அரி எனல் கூடாமையின் சாதி பற்றிக் கூறியதெனக் கொள்க ; அன்றி அரி என்பதற்கு வினைத்திறம் என்றும் ஓசை என்றும் கூறுதலுமாம் (ப. 8) என்கிறார்.

#### 3.1.3. மங்கல வாழ்த்து

'இத்தொடர்நிலைச் செய்யுட்குச் சிறந்த மங்கல மொழியாதலின் திங்களை முற்கூறினார்' என்பார் நல்லார். மங்கல வாழ்த்து என்பதற்கு இரட்டுற மொழிதலால் நூன்முகத்து உரைக்கப்படும் மங்கலமாகிய வாழ்த்து என்றலும் பொருந்தும் (ப.23) என்கிறார் நாட்டார்.

#### 3.1.4. ஆடல் தோற்றம் (கொலைக்களக் காதை)

கூடல் மகளிர் ஆடல் தோற்றமும்

என்ற தொடரில் ஆடல் தோற்றம் என்பதற்கு இரட்டுற மொழிதலால் ஆடலிடத்துத் தோன்றும் முகத்தோற்றமும் ஆடல் வேறுபாடும் என்றுரைத்தலுமாம் (ப.385) என்கிறார்.

### 3.1.5 தஞ்சம்

தஞ்சமோ, தோழி தலைவன் வரக் காணேன் (துன்பமாலை, அடி 20) என்ற அடிக்கு என் நாயகன் வரக் காண்கின்றிலேன் ஆதலான் இனி எனக்கொரு அடைக்கலமுண்டோ எனப் பொருள் தருகிறார். பின்னர், தஞ்சமோ என்பதற்கு நிகழ்ந்த செயல் எளிதன்று எனக் கூறினும் அமையும்(ப.416) என்கிறார் நாட்டார்.

இவ்வயலார் சொல்லுகின்ற மறை எளிதன்று
எனக்கு இனி என்ன தஞ்சம் உண்டு என்பார், உ.வே.சா.

### 3.1.6 ஏவல்

ஏவல் தெய்வத்து எரிமுகம் திறந்தது (அழற்படு அடி 1)

என்ற அடிக்கு, கண்ணகியின் ஏவல் பெற்ற தீக்கடவுளின் எரியின் கூறு வெளியிட்டது என உரை எழுதி 'பண்டேயோர் ஏவலுடையேன்' என வஞ்சினமாலையுள் அங்கி வானவன் கூறுதலின் ஈண்டு ஏவல் என்றது அதனையும் குறிக்கும் (ப. 454) என்று விளக்கியுள்ளார்.

"அக்கினியுடைய எரியின் கூறு பிரகாசித்தது
அங்கி அடக்கம் நீங்கி வெளிப்பட்டது என்றுமாம்" என்பர் உ.வே.சா.

### 3.1.7. ஆழி ஆள்வான்

ஆழி ஆள்வான் பகல் வெய்யோன் (கானல் வரி, பாடல் எண். 27)

என்ற அடிக்கு ஆழியை ஆள்பவன் என்றும் ஆழியால் ஆள்பவன் என்றும் இருபொருள் தருகிறார். கதிரவன்.

1. கடல் சூழ்ந்த உலகை ஆள்பவன்
2.சக்கரத்தால் ஆள்பவன் என்பது பொருள்.

### 3.1.8 அருளறம் பூண்டோன்

அருளறம் பூண்டோன் திருமெய்க் கல்லது (நாடுகாண், அடி 200) என்ற அடிக்கு அருளையும் அறத்தையும் மேற்கொண்டோன் எனப் பொருள் தந்து, பின்னர் அருளினால் அறம் பூண்டோன் எனலும் அமையும் என்கிறார் (ப. 245).

### 3.1.9. ஆதியில் தோற்றத்து அறிவன் (காடுகாண், அடி 4)

ஆதியின்மையைத் தோற்றமாக உடையவன். எனவே இனஞ்செப்பி அந்தமின்மையை முடிவாக உடையவன் என்பதாம். ஆகவே ஆதியும் அந்தமும் இல்லாதவன் என்பதாம் என்கிறார் உ.வே.சா.

1. தனக்கொரு முதல்வன் இல்லாதவன்
2. இனி, தோற்றத்தின்கண் முதல் இல்லாதவன்;

பிறப்பிலான் என்றபடி என்கிறார் நாட்டார். (ப.257)

### 3.1.10 என்கண் கிடந்த வண்ணமும் நின்ற வண்ணமும்

என்கண் காட்டென்று என்னுளம் கவற்ற (காடு காண், அடி 52)

என்ற அடிக்கு என் கண்கள் காட்டென்று எனது உள்ளத்தைக் கவலை செய்தலால் எனக் கண்ணை எழுவாயாகக் கொண்டு பொருள் தந்துள்ளார். பின் இனி, எனக்குக் காட்டுக என்று உள்ளம் கவற்றுதலால் வந்தேன் என உள்ளத்தை எழுவாய் ஆக்கிப் பொருள் தருகிறார். இதற்கு என்கட் காட்டெனத் திரிதற்பாலது திரியாது நின்றதெனல் வேண்டும் என்று விளக்கம் அளித்துள்ளார் நாட்டார் (ப.261).

என்கண் - எழுவாய் என்கிறார் உ.வே.சா. (கண்ணும் கொளச்சேறி நெஞ்சே - குறள்)

### 3.1.11. வட்டிகைப் பூங்கொடி (காடுகாண், பக்.266)

வட்டிகைப் பூங்கொடி வந்து தோன்றி (காடுகாண், 121)

என்ற அடிக்கு, சித்திரம் போன்ற பூங்கொடி எனப் பொருள் தந்து எழுதுகோலால் எழுதிய பூங்கொடி எனலுமாம் என்கிறார். (ப.266).

### 3.1.12. பன்மீன்தானை

பன்மீன் தானையொடு பாற்கதிர் பரப்பி (புறஞ்சேரி, அடி 17)

பலவகைப்பட்ட மீனாகிய சேனையுடன் திங்களஞ் செல்வன் தோன்ற என்றும் மீனக்கொடியை உடைய தானை என்னும் பொருளும் தோன்றும் (ப. 302) என்றும் விளக்கியுள்ளார் நாட்டார்.

மீன்தானை - கயற்கொடித் தானையுமாம் என உ.வே.சா.உரை தந்துள்ளார்.

### 3.1.13 வீழ்துயருற்றோள் விழுமம் கேட்டு (புறஞ்சேரி, 71)

வீழ்ந்த துன்பமுற்றோளாகிய மாதவியின் இடும்பையைக் கேட்டு என உரை எழுதி, விருப்பத்தான் வருந்துயர் என்றுமாம் என்கிறார் நாட்டார். (ப. 306).

உ.வே.சா. இரண்டாவதாகக் குறிப்பிட்டுள்ள உரையை எழுதியுள்ளார். இதுவே பொருத்தம் என்று தோன்றுகிறது.

### 3.1.14 பொருந்துழி அறிந்து போதீங்கென்றலும்

(ஊர்காண்காதை, அடி 61)

விருந்தெதிர் கொள்வாரிடத்தை அறிந்து கொண்டு ஈங்குப் போதுவாயாக என்று சொல்லலும் என்று பொருள் தந்து தீங்கு பொருந்துழி அறிந்துபோ எனவும் பொருள் கொள்ளக் கிடந்தமை காண்க என்று நயம் காண்கிறார் நாட்டார் (ப.330)

1.சாவக நோன்பு நிகழ்த்தற்கேற்ற இடமீது என்றறிந்து
2.விருந்தெதிர் கொள்வாரிடத்தை அறிந்து என்றுமாம் என்று விளக்கியுள்ளார் உ.வே.சா.

### 3.1.15 காதலஞ்செல்வர்

கடைகழி மகளிர் காதலஞ் செல்வரோடு (ஊர்காண். அடி 71)

தம்பாற் காதல் கொண்ட செல்வ இளைஞர், தாம் காதலிக்கும் செல்வத்தினையுடைய காமுகர் (ப.331) என இருபொருள் தருகிறார் நாட்டார். (உ.வே.சா. கருத்து பின் முன்னாகும்)

### 3.1.16 அறுபொருள்

அறுபொருள் இவனென்றே அமரர் கணம் தொழுதேத்த

(ஆய்ச்சியர் குரவை, பாடல் 33)

அறுபொருள் - ஐயமற்ற பொருள் இவன் என்று (அற்ற பொருள்) (அற்ற காரியம்-தீர்ந்த பொருள் என்பது போல). அறுவகைச் சமயத்தாரும் துணிந்த பொருள் என்றுமாம் என்கிறார் உ.வே.சா.

நாட்டார்-அறுபொருள்-தீர்ந்த பொருள்:(அறுதியிடப்பட்ட பொருள்) என விளக்கம் தந்து - ஐயமற்ற பொருள் என்றும், அறுவகைச் சமயத்தாரும் துணிந்த பொருள் என்றும் கூறுவாரும் உளர் என்கிறார். (ப.410) இப்பொருளில் உடன்பாடு இல்லாததால் இவ்வாறு கூறுகிறார் நாட்டார்.

### 3.1.17 வேந்தர்க்கு இகழ்ச்சி தரும்

எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சியும் தரூஉம்
(கால்கோட்காதை, அடி 12)

1.வேந்தர் எம்மை இகழ்தலையும் உண்டாக்கும்.

2.எமக்கேயன்றி அவர்க்கும் இகழ்ச்சியைத் தரும் என்றலுமாம் (ப. 535) என்கிறார்.

### 3.1.19 நிலம்தரு திருவின் நிழல் வாய்நேமி

(அடைக்கலக் காதை அடி 1)

நிலத்திற்குப் பல செல்வத்தினையும் தருகின்ற அருள் வாய்த்த ஆணையை என்று உரை எழுதி மாற்றாரது நிலத்தைத் தரும் வெற்றியாகிய செல்வம் என்றும் ஒளிபொருந்திய நேமி என்றும் உரைத்தலுமாம் (ப.353) என்கிறார்.

### 3.1.20 படுகாலை (ஊர்சூழ், அடி 5)

1.ஞாயிறு மறையும் காலம்; மாலை.

2.இறப்பு நெருங்கிய காலம் எனவும் உரைப்ப என்கிறார் நாட்டார். (ப. 422)

உ.வே.சா. இரண்டாம் பொருள் மட்டுமே கொள்கிறார். இதுவே ஏற்புடையது.

### 3.1.21 கொண்ட கொழுநர்

கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம் (ஊர்சூழ் , அடி 52)
என்ற அடிக்கு, தாம் உள்ளத்துக் கொண்ட கணவருடைய மிக்க குறையினை எனப் பொருள் தந்து,

'தம்மை மணந்து கொண்ட எனவும்
தம்மை உள்ளத்துக் கொண்ட எனவும்
கூறினும் அமையும்' என்பார் நாட்டார் (ப. 426)

மூன்றாவது சொல்லியுள்ள பொருளைத் தருவார் உ.வே.சா.

### 3.2.1.(மணிமேகலை)

விழாவறை காதையில் நுதல்விழி நாட்டத்து இறையோன் (அடி 54) என்ற அடிக்கு விழிநாட்டம் - இமையா நாட்டம் என்று பொருள் தந்து. இனி இறைவி கண் புதைத்த பொழுது நெற்றியிற் புறப்பட விட்ட கண் என்றுமாம் (ப.19) என்பர் நாட்டார். முன்பின்னாக உரை தருவார் உ.வே.சா.

3.2.2. (காதை 9 அடி 40)

அலத்தகச் சீறடி என்பதற்குச் செம்பஞ்சுக் குழம்பு தோய்ந்த அடி என்று பொருள் தந்து, பின்னர் செவ்வரக்கு என்பாரும் உளர் (ப. 130) என்பர் நாட்டார். செவ்வரக்கு என்று பொருள் தருபவர் உ.வே.சா.

3.2.3. (காதை 10 அடி 9)

அறம் பாடு சிறக்க என்பதற்கு அறத்தின் கூறுபாடுகள் சிறப்படையுமாறு என்று பொருள் தந்து அறத்தின் தோற்றம் என்றும் பொருள் தருவார் நாட்டார்.(137) இரண்டாவது பொருளை மட்டும் தந்துள்ளார் உ.வே.சா.

3.2.4. (காதை 10 அடி 10)

சுடர் வழக்கற்று என்பதற்கு ஒளி வழங்குதலின்றி என்று பொருள் எழுதி, பின்னர் ஞாயிறு என்று கூறுதலுமாம் என்பர் நாட்டார் (ப. 137) சூரியன் என்று குறிப்புரை தருவர் உ.வே.சா.

3.2.5. (காதை 10 அடி 20-21)

இராகுலன் தன்னொடு புலத்தகை எய்தினை என்பதற்கு ஊடல் தன்மை என்று பொருள் தந்து ஊடற்கூறுமாம் என்பார் நாட்டார் (ப. 138) புலத்தல் - ஊடுதல், புலத்தகை எய்தினை - ஊடினாய் என்பர் உ.வே.சா. (ப.109)

3.2.6 (காதை 11 அடி 44)

அமுதசுரபி எனும் மாபெரும் பாத்திரம் அமுதத்தைக் கொடுக்கும் காமதேனுவைப் போன்றதென்பது பொருள். சுரபி - பசு எனப் பொருள் தந்து பின்னர் சுரபி - மணம் எனக் கொணடு அமிழ்தம் போன்ற மணமுடைய தென்றும் பொருள் கூறுவர் (ப.153) என்பர் நாட்டார். சுரபி - மணம், காம்தேனு எனப் பொருள் தருவர் உ.வே.சா. (ப.123) . நாட்டார் கூறும் முதற் பொருளே ஏற்புடையதாகும்.

3.2.7. (காதை 21 அடி 1)

கடவுள் எழுதிய நெடுநிலைக் கந்தின் என்பதற்குத் 'தெய்வத் தன்மையுடைய பாவை எழுதப்பெற்ற நெடிய நிலையாகிய தூணின்' என்று பொருள் தந்து, பின்னர் கடவுளால் எழுதப்பட்ட பாவை என்றும் கொள்க (ப.292) என்பர் நாட்டார். துவதிகனை யொத்த பாவையை மயற்பண்ணின

என்று இரண்டாம் பொருள் தருவர் உ.வே.சா. நாட்டார் கூறும் முதற்பொருளே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

### 3.2.8 (காதை 21 அடி 144)

ஈறுகடை போக எனக்கருள் என்றலும் என்ற அடியில் ஈறு என்பதற்கு உ.வே.சா. போல மரணம் என்று பொருள் தந்து பின்னர் வீடுபேறுமாம் (ப.301) என்பர் நாட்டார்.

### 4.1. உரைமறுப்பு (சிலப்பதிகாரம்)

### 4.1.1. கோவலன் மதுரைப் பயணம்

நாடுகாண்காதையில் அடியார்க்கு நல்லார் இந்திரவிழா வைகாசி இருபத்தெட்டில் முற்பக்கத்தின் பதின்மூன்றாம் திதியும் திங்கட்கிழமையும் கூடிய அனுடத்தில் கடலாடினர் என்று கூறுகிறார். அடுத்தநாள் வைகாசி இருபத்தொன்பதில் முற்பக்கத்தின் பதினான்காம் திதியில் செவ்வாய்க்கிழமையும் கேட்டையும் பெற்ற நாசயோகத்தில் கோவலன் மதுரைக்குப் புறப்பட்டான் எனக் கூறுகிறார். கோவலன் மதுரைக்குப் புறப்பட்ட நேரம் தீயநேரம் என்பதை வலியுறுத்த அடியார்க்கு நல்லார் இவ்வாறு பொருள் கொள்வதாக நாட்டார் கூறுகிறார். ஆயின் இவையெல்லாம் கணித முறையுடன் கூடிய உண்மைகளெனத் துணிதல் சாலாது. வைகாசித் திங்களில் முற்பக்கத்தின் பதின்மூன்றாம் திதியும் அனுடமும் கூடுதல் என்பதே இயற்கையன்றாகும். இவையெல்லாம் ஆராய்ந்து துணிதற்குரியன எனக் கூறுகிறார் நாட்டார் (பக்.227-228).

### 4.1.2. கோட்டம் - கோயில்

குணவாயில் கோட்டம் என்பதற்கு அருகன்கோயில் என்று பொருள் தந்துள்ளார் நல்லார். கோட்டம் என்பது பல கடவுளர் உறையும் இடங்களுக்கும் பெயராகக் கனாத்திறம் உரைத்த காதையில் வழங்கியிருப்பதாலும் கோயில் என்பதன் பரியாயமாகக் கொண்டு ஊர்காண் காதையிலும் முருகன் கோயிலைக் கோட்டம் என்று கூறியிருத்தலானும், குமரக்கோட்டம் முதலிய பெயர் வழக்கினும் இருத்தலானும் ஈண்டுக் கோட்டம் என்பதற்கு அருகன் கோட்டம் என்று பொருள் துணிதல் சாலாது (ப. 5) கோயில் என்ற பொதுப் பொருள் ஏற்புடையது என்பது கருத்து.

### 4.1.3. மன் - மிகுதிப் பொருள் தருவது

'மன்பெரும் பீடிகை மறுகில்' என்பதற்குப் பெருமையுடைய வணிகர் தெருவில் என்று பொருள் தந்து, மன் மிகுதிப் பொருட்டு; மன்னு மாதர் பெருங்கற்பு என்று எடுத்துக்காட்டுகிறார். மன் கழிவின்கண் வந்தது என நல்லார் கூறியது ஈண்டைக்குப் பொருந்துவதன்று என்கிறார் (ப.7)

### 4.1.4 கள்வனைக் கொன்று சிலம்பு கொணர்க

'அக்கள்வனைக் கொல்ல அச்சிலம்போடு அவனையும் ஈங்கு கொணர்கவெனச் சொல்லக் கருதியவன் வினைவிளை காலமாதலின் கொன்று அச்சிலம்பைக் கொணர்க என்றான் என்கிறார் அடியார்க்கு நல்லார். தேர்ந்து முறை செய்தற்குரிய காவலன் தேராது இங்ஙனம் கூறியது வினையின் பயன் என்பார் வினைவிளை காலமாதலின் என்றார். முறைசெய்யும் அரசன் ஆராய வேண்டிய நெறியொன்றையும் கைக்கொண்டிலன் என்பார், 'யாவதும் தேரானாகி' என்றார். எனினும் என் கோதையின் காற்சிலம்பு கள்வன் கையதாகின் கொன்று கொணர்க என்றமையான் அம் மன்னனிடத்துக் கொடுங்கோன்மை இன்மை உணரப்படும் (ப.386) என்றெல்லாம் விளக்கம் தந்துள்ளார் நாட்டார்.

### 4.1.5. அடிகள் நீரே என்பதற்கு அரும்பத உரையே பொருத்தம் எனல்

இக்காப்பியம் மூவேந்தர்க்கும் உரியது. ஏனைவேந்தரை இவர் புகழார் என்று எண்ணி யாம் காப்பியம் செய்வோம் எனக் கருதி நீரே அருளும் எனச் சொன்னார் என்று நல்லார் உரை தந்துள்ளார். அது அடிகளையும் சாத்தனாரையும் குறைவுபடுத்துவதாக உள்ளது. எனவே அரும்பத உரையே ஏற்புடையது என்கிறார் நாட்டார். ஏனை இருவேந்தர் இயல்பும் வேத்தியலும் பொதுவியலும் எல்லாம் உணர்ந்த நீரே அருளவேண்டும் (பக். 11-12)

### 4.1.6. மங்கல வாழ்த்துப் பாடல்

காதை என்று ஏன் குறிப்பிடவில்லை என்றால் ஆசிரியப்பாவால் வாராது கொச்சகக் கலியால் வருதலால், கதை நிகழ்ச்சிகள் இன்மையால், வாழ்த்தும், உரையும் பாடலுமாய் வருதலால் இங்ஙனம் பெயர் கொடுத்தார் என உணர்க.

ஆசிரியப்பாவால் வாராதது காதை அன்று என்றால் வாழ்த்துக்காதை என்னும் பெயர் பொருந்தாது என மேற்கூறிய கருத்தை

மறுக்கிறார் (அது ஆசிரியப்பாவால் வரவில்லை). ஆகவே பெரும்பாலும் கதைத்தொடர்பு உடையது காதை என்பதே அடிகள் கருத்துப் போலும் (ப. 12) என்கிறார்.

### 4.1.7. மாசாத்துவான்

மாசாத்துவான் - இயற்பெயர், இருநிதிக்கிழவன் - சிறப்புப் பெயர். அரும்பதம் கூறுவதுபோல மாசாத்துவான் குடிப்பெயர் என்பது பொருந்தாது என்கிறார் (ப. 26)

'ஒரு பெருங்கருப்புவில் இருகரும்புருவம் என்றது சேம வில்லையும் கூட்டி' என்று நல்லார் கூறுவது பொருந்தாது (ப. 38) . பின் வேலொன்று கண்ணிரண்டா ஈத்தது என வருதலின் இதனையும் அவ்வாறு கோடல் பொருந்தும் என்கிறார் நாட்டார்.

### 4.1.8. நெடுவேள் குன்றம் எது

திருச்செங்கோடு என்கிறார் அரும்பதம். திருச்செங்குன்று என்கிறார் நல்லார். செங்குன்று என்பது கொடுங்கோளூர்க்கு அயலதாகிய மலை என்றும் திருச்செங்கோடு வஞ்சி நகர்க்கு வடகீழ்த்திசையில் அறுபதின் காத வழியில் உள்ளதென்றும் கொங்கு நாட்டினராகிய அப்புலவர் பெருமான் துணிந்து கூறலின் கொடுங்கோளூராகிய வஞ்சியையும் செங்குன்றையும் அவர் நன்கறிந்துள்ளார் என்பது பெறப்படும் எனக் குறிப்பிட்டு அடியார்க்கு நல்லார் கருத்தினை ஏற்று உரை தந்துள்ளார் நாட்டார். (ப. 5)

### 4.1.9 இருவகைக் கூத்து

இருவகைக் கூத்து என்பதற்கு அரும்பத உரையாசிரியர், நல்லார் இருவரும் இருவகைப்பட்ட அகக்கூத்து என்றும் பலவகைக் கூத்து என்பதற்குப் பலவகைப்பட்ட புறநடங்கள் என்றும் பொருள் கூறினர். அகக் கூத்தெல்லாம் தேசி, மார்க்கம் என அடங்காமையானும் வசை, வரி, விநோதம் முதலியன அகக்கூத்துள் அடங்காமையானும், இருவகைக்கூத்து என்பதற்கு அகமும் புறமும் ஆகிய இருவகைக்கூத்து என்பதே பொருத்தமாகும் என்கிறார் நாட்டார் (ப.51).

### 4.1.10 மங்கல அணி

மங்கல வாழ்த்துப் பாடலில் அகலுள் மங்கல அணி எழுந்தது என்பதற்கு ஊரில் மங்கல நாண் வலஞ்செய்தது என்பர் நாட்டார். மங்கல அணி எங்கும் எழுந்தது என்னும் அடியார்க்கு நல்லார் கருத்து விளங்குமாறின்று

என்பர் (ப. 28) நாட்டார். மனையறம் படுத்த காதையில் மறுவில் மங்கல அணி என்பதற்கு, குற்றமற்ற நினது புனையாத அழகு (இயற்கை அழகு) என்று பொருள் தந்து மாங்கலியம் என்பாரும் உளர் என்று பொருள் தந்துள்ளார். அந்திமாலைச் சிறப்பு செய் காதையில் மங்கல அணியின் என்றே பொருள் கூறி அடிக்குறிப்பில் இயற்கையழகுமாம் என்று குறிப்பிட்டுள்ளார். இவ்விடங்களில் முறையே மாங்கல்ய சூத்திரம், இயற்கையழகு என்கிறார் உ.வே.சா.

### 4.1.11. சூழ்கழல் மன்னன் - கரிகாலன் அல்லன்

'சூழ்கழல் மன்னற்குக் காட்டல் வேண்டி' என்ற அடிக்குப் பொருள் தரும்போது மன்னன் கரிகாற் பெருவளத்தான் என்பர் அரும்பதமும் நல்லாரும். கரிகாலன் என்று இங்குப் பெயர் குறிப்பிடப்படவில்லை. செருவெங்காதலின் திருமாவளவன் புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள் என இந்திரவிழாவூரெடுத்த காதையிலும் மன்னன் கரிகால்வளவன் நீங்கியநாள் என மேகலையிலும் வடதிசைப் படையெடுப்பு சுட்டப்பட்டுள்ளது. நிகழ்காலத்தில் வைத்து அவன் யாண்டும் கூறப்படவில்லை. மதுரைக் காண்டத்திறுதியில் பாண்டியன் நெடுஞ்செழியனும் வஞ்சிக்காண்டத்திறுதியில் செங்குட்டுவனும் பெயர்குறித்துச் சுட்டப்பெற்றுள்ளனர். புகார்க் காண்டத்திறுதியில் சோழர் யாரும் பெயர் குறித்துக் குறிப்பிடப்படவில்லை. எனவே கரிகாலன் அப்போதிருந்தான் என்பது பொருந்தாது (ப.50) என மறுக்கிறார். சோழ மன்னனை யார் என்று சிலம்பு சுட்டவில்லை என்பதே உண்மை.

### 4.1.12. பகல் - பகல் அரை யாமமா? ஒரு மாத்திரைப் பொழுதா?

'ஆர் இருள் யாமத்தும் பகலும் துஞ்சான்' - இருள் மிக்க நள்ளிரவிலும் ஒரு மாத்திரைப் பொழுதும் துயிலானாய் என்று உரை எழுதியுள்ளார் நாட்டார். இவர் இருளையுடைய அரையாமம் என இயைக்க நல்லார் அரையிருளும் யாமமும் என விரித்து அரையிருள் இரண்டாம் யாமம், யாமம் ஓர் யாமம் - பகல் - அரையாமம் என்பர். பொருந்துமேற் கொள்க என்கிறார் நாட்டார். பகல்-ஒரு மாத்திரைப் பொழுதென்க.

### 4.1.13 மாமுது பார்ப்பான் மாமுது முதல்வன்

மாமுது பார்ப்பான் - பிரமன்; ஈண்டு இருவரையும் இடைநின்று பொருத்துவிக்கும் பார்ப்பான் ஆவான் என்பது நாட்டார் கருத்து (ப.28)

பிதாமகன் - புரோகிதர் என்பார் நல்லார். மாமுது முதல்வன் சிவபிரான் என்பார் நாட்டார் (ப. 124) பிரமன் என்பர் நல்லார்.

### 4.1.14 இந்திரவிழா

நல்லநாள் பார்த்துக் கோவலன் கண்ணகி மணம் சந்திரன் உரோகிணியோடு சேர்ந்த நன்னாளில் நிகழ்ந்ததாகக் குறிப்பிடுவர். இந்திரவிழா ஊரெடுத்த காதையிலும், கால்கோட்காதையிலும் நல்லநாள் பார்த்த செய்திகள் வருகின்றன.

இந்திரவிழவு கொண்டு எடுக்கும் நாள் என்பதற்குக் கடலாடு காதையில் 'இந்திரவிழாவிற்குக் கால்கொண்டு செய்யும் நாள் இது' என விளக்கம் அளிக்கிறார் நாட்டார். ஆனால் இவ்வடிகளுக்குப் பங்குனித் திங்கள் இருபத்தொன்பதிற் சித்திரை நாளிலே அவ்விழா முடிதலின் கொடியெடுக்கு நாள் மேலை மாதத்து இந்தச் சித்திரை காணெனச் சொல்லி மேல்விளக்கத்தில் இதுவெனச் சுட்டினான். அன்றும் சித்திரையாகலின், ஈண்டுத் திங்களும் திதியும் கூறியது என்னையெனின் கோவலனும் மனைவியும் ஊரினின்றும் போந்த திங்களும் திதியும் வாரமும் நாளும் வழிச்செலவும் ஒழிவும் மதுரையிற் சென்று புக்கு இவன் இறந்துபட்ட திங்கள் முதலாயுள்ளவற்றோடு மாறுகொள்ளாது முடித்தற்கெனக் கொள்க என்பர் அடியார்க்கு நல்லார்.

அடியார்க்கு நல்லார் வலிந்துரைக்கும் பொருள் மெய்யெனத் தெளியற்பாலதன்றாயினும், அவர் கருத்தினை அறிந்து கோடல் க்ருதி, ஈங்குக் காட்டப்பட்டது என்கிறார் நாட்டார் (ப.137). இந்திரவிழா குறித்து முன் பின் குறிப்பில்லை. சங்கப் பாடல் ஒன்றில் உவமையாக உள்ளது.

### 4.1.15 மயிர்

பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும் கட்டு நுண் வினைக் காருகர் (16-17 அடி, இந்திரவிழா) என்பதில் மயிர்-எலிமயிர் என்பர் அடியார்க்கு நல்லார். திருத்தக்கதேவரும் பலவிடத்து எலிமயிர்ப் போர்வையைக் குறித்திருப்பதையும் அவ்வெலியினியல்பினையும் கம்பளத்தினியல்பினையும் கூறியுள்ளார் என்பதையும் எடுத்துக்காட்டி முடிவில் இஃது ஆராய்தற்குரித்து என்கிறார் நாட்டார் (ப.11).

### 4.1.16 காமன் ஆடிய பேடி ஆடல்

காமன் ஆடிய பேடு என்னும் கூத்து எனப் பொருள் தருகிறார். பின்னர் மேல்விளக்கத்தில் அடியார்க்கு நல்லார் உரையில் இது ஆண்பேடென்று பெயர் பெறும் எனக் காணப்படுவது ஆராய்தற்குரித்து என்கிறார் (ப.114).

### 4.1.17 இசை தொடர்பான கருத்து

வேனிற் காதையில் 35ஆம் அடியில் குரல் முதலாக எடுத்து இளி குரலாக வாசித்தாள் என்பார் பழைய உரையாளர் இருவரும். அதன் விளக்கத்தில் வட்டப்பாலை இடமுறைத்திரிபு கூறுகின்றார் எனத் தொடங்கி அடியார்க்கு நல்லார் கூறும் விளக்கத்தை அவ்வாறு பொருள் கொள்வதற்குச் செய்யுளில் யாதும் சொல்லில்லை என்று மறுக்கிறார் நாட்டார். ஆய்ச்சியர் குரவை, திவாகரம் முதலிய நிகண்டுகள், அரங்கேற்று காதை ஆகியவற்றில் குறிப்பிடப்படும் கருத்து இங்கு மாறுபட்டிருக்கிறது என்று எடுத்துக்காட்டியுள்ளார் (ப.199).

ஆய்ச்சியர் குரவை விளக்கத்தில் அடியார்க்கு நல்லார் கூறும் இசை குறித்த கருத்துகள் அரங்கேற்று காதையிலும் வேனிற்காதையிலும் கூறப்பட்ட இதனின் வேறுபட்ட முறையினவாதல் காண்க என்கிறார் நாட்டார் (ப.402).

குரல் குரலாயது செம்பாலை;
துத்தம் குரலாயது படுமலைப்பாலை;
கைக்கிளை குரலாயது செவ்வழிப்பாலை;
உழை குரலாயது அரும்பாலை;
இளி குரலாயது கோடிப்பாலை;
விளரி குரலாயது விளரிப்பாலை;
தாரம் குரலாயது மேற்செம்பாலை (ப. 402)

வேனிற்காதை உரையில் இசை குறித்த செய்திகள் (அடி 37-41) (ப.200)

உழை முதலாக அகநிலை மருதம்,
உழை யீறாகப் புறநிலை மருதம்,
குரல் முதலாக அருகியல் மருதம்,
குரல் ஈறாகப் பெருகியல் மருதம்

பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி எனப் பண் 4

| | | |
|---|---|---|
| பாலையாழுக்குத் திறன் | - | 5 |
| குறிஞ்சி யாழுக்குத் திறன் | - | 8 |
| மருதயாழுக்குத் திறன் | - | 4 |
| செவ்வழியாழுக்குத் திறன் | - | 4 |
| | | 21 |

### 4.1.18

| | | |
|---|---|---|
| திறத்தின் வகையாகப் பாலையாழுக்கு | - | 15 |
| திறத்தின் வகையாகக் குறிஞ்சியாழுக்கு | - | 24 |

திறத்தின் வகையாக மருதயாழுக்கு - 12
திறத்தின் வகையாகச் செவ்வழி யாழுக்கு - 12 (ப.200)
என்றெல்லாம் விளக்கியுள்ளார்.

### 4.1.19 கால்கோட் காதை ,அடி 162

கூற்றம் கொண்டு இச்சேனை செல்வது

கூற்றுவனை அழைத்துக் கொண்டு இப்படை செல்கின்றது என்பது பொருள். நாட்டார் கூற்றம் பின்வரச் சேனை செல்வது என்று விளக்கம் தருகிறார் (பக்.545-546).

கூற்றக் கொண்டி என்பது பாடமாயின் கூற்றத்தையொக்கும் கொண்டிச்சேனை என்க. கொண்டி - கொள்ளை (ப. 546)

### 4.2.1. மணிமேகலை பதிகம் என்ற பகுதியில்

மற்றவர் பாதம் வணங்கிய வண்ணமும்
..............................................
தருமம் கேட்டு .................. பாவை நோற்றதும் (அடி 92-94)

என்ற பகுதிக்கு விளக்கம் தரும்போது மற்றவர் பாதம் வணங்கிய வண்ணமும் என்பதனை நெகிழ விடுத்தும், கேட்டு நோற்றதும் என்பதனைக் கேட்டதும் நோற்றதும் என இரண்டாகக் கொண்டும் ஈற்றிலுள்ள இரு காதைகளின் பெயரை முன்னர் யாரோ திரித்து அமைத்துள்ளனர். உம்மை கொடுத்து எண்ணியவற்றுள் ஒன்றை விடுத்தலும் ஒன்றைப் பகுத்தலும் கூடாமையானும் இறுதிக் காதையின் ஈற்றிலும் 'தவத்திறம் ........... பாவை நோற்றனளென்' எனக் கேட்டு நோற்றாமை ஒன்றாக உரைத்திருத்தலானும் அங்ஙனம் அமைத்தல் பொருந்தாதென்க (ப.11) என்று நாட்டார் மறுப்புக் கூறுவது ஏற்புடையதாகத் தோன்றுகிறது.

### 4.2.2. (காதை 11 அடி 66)

கண்பிறர்க்கு அளிக்கும் கண்ணோய்

என்பதற்கு உயிர்கட்கு ஞானத்தை அளிக்கும் மெய்யுணர்வுடையோய் நின் திருவடிகளை (ப.154) என்று பொருள் தந்து, கண் - ஈண்டு ஞானம் என்று உ.வே.சா. போலவே குறிப்பிட்டு, புத்தன் எடுத்த பல பிறப்புகளுள் ஒன்றில்

வந்து இரந்த இந்திரற்குக் கண்ணைக் கொடுத்ததனை இதற்குப் பொருளாகக் கொள்ளுதல் சிறப்பின்று (ப.155) என்பர் நாட்டார். வீரசோழியம், நீலகேசிப் பாடல்களை எடுத்துக்காட்டி இவ்வாறு பொருள் கூறினும் பொருந்தும் என்கிறார் உ.வே.சா. (ப.125).

### 4.2.3. (காதை 13 அடி 40)

அடர்க்குறு மாக்களொடு அந்தணர் எல்லாம்

என்ற அடிக்கு நெருக்குதலைச் செய்யும் முழுவலியுடைய மக்களோடு என்று பொருள் தரும் நாட்டார் அடர்க் குறுமாக்களொடு எனப் பிரித்துக் காண்பது பொருத்தம் அற்றது என்கிறார் (ப.181)

### 4.2.4. (காதை 17 அடி 34)

அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன்
திறத்து வழிப்படூஉம் செய்கை போல

என்ற அடிக்கு அறநெறியினால் ஈட்டப்பட்ட ஒள்ளிய பொருள் அறம் செய்வோன் கருத்தின் வழியே சென்று பயன்படுமாறு போல என்று பொருள் தந்துள்ளார் நாட்டார் (ப.227) . ஆதிரைபாற் பெற்றதற்கு அறத்தின் ஈட்டியதும், மணிமேகலை கருதியவாறு மன்னுயிர்க்களிக்க அது பயன்படுதற்கு அறவோன் திறத்து வழிப்படுதலும் உவமையாயின. இனி அறவோன் என்பதற்குச் சற்பாத்திரம் என்றும், திறத்து வழிப்படும் என்பதற்குப் பெறுவோர் பெருமைக்குத் தக்கபடி பெருகும் என்றும் கருத்து கொண்டார் மகோமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையர். ஈண்டு அது பொருந்துமேற் கொள்க (ப.227) என்கிறார் நாட்டார்.

### 4.2.5 (காதை 17)

நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி (ப.227 அடி97)

என்ற அடிக்கு, திருமால் இராமவதாரத்தில் பருவத முனிவரும் நாரதரும் அம்பரீடனுக்கிட்ட சாபமாகிய இருளைத் தான் ஏற்றுக் கொண்டமையால் அதனால் மூடப்பட்டுத் தன்னை மாயன் என்றறியாது மயங்கியிருந்தனன் என்னும் இலிங்க புராணக் கதையை ஏற்றி உரைப்பாருமுளர் (ப.228) என்கிறார் நாட்டார். இவ்வாறு உரைப்பவர் உ.வே.சா. (ப.179).

4.2.6. (காதை 22 அடி 53)

வான்தரு கற்பின் மனையறம் பட்டேன்

என்ற அடிக்கு மழையைத் தரும் கற்புடைய மகளிர்க்குரிய இல்லறத்திற் பொருந்தினேன் (ப. 316) என்று பொருள் தருவர் நாட்டார். மனையறம் பட்டேன் என்பதற்கு இல்லறத்திற்குத் துணையாக நிற்றலை யொழிந்தேன் என்று பொருள் கூறியுள்ளார் டாக்டர் உ.வே.சா என எடுத்துக்காட்டியுள்ளார் அவர். ஆனால் அயலான் உள்ளத்தில் எளிதில் நுழைந்ததால் மழைவளம் தரும் கற்பு மகளிர்க்குரிய மனையறம் பிழைத்தேன் என்று பொருள் கொள்வதே நேரிது எனத் தோன்றுகிறது.

4.2.7 (காதை 5 அடி 7)

மணிமேகலையைப் பார்க்கும் உதயகுமாரன் இயல்பை ஓவியன் உள்ளத்து உள்ளியது வியப்போன் என்கிறார் சாத்தனார். இவ்வடிக்கு மணிமேகலையின் உருவத்தை ஓவியம் என நினைந்து ஓவியக்காரன் அதனை எழுதுமாறு மனதில் அமைத்ததை வியக்கின்றவனாய் (ப.71) என்று பொருள் தருகிறார் நாட்டார். ஓவியன் என்பதற்கு உதயகுமாரன் சித்திரம் போன்றவனாய் நின்றென்று உரைத்தல் ஈண்டைக்குப் பொருந்தாமை உணர்க என்று விளக்க உரையில் குறிப்பிட்டுள்ளார் (ப.72) நாட்டார். இவ்வாறு உரைப்பவர் உ.வே.சா. (ப.55) ஆவார்.

5.1. பிறர் உரையை ஏற்றல்.

5.1.1. நீர் தலைப்படுதல்

நீர் நிலைக்கண் சார்ந்தவன் என்பார் நாட்டார். சந்தி பண்ணுதல் என்பார் அரும்பதம்.

5.2. புறஞ்சேரி இறுத்த காதை

வசந்த மாலைவாய் மாதவி கேட்டு (சிலம்பு) என்பதற்குக் கோவலன் கண்ணகியுடன் சென்றதனை மாதவி கேட்டு என உரைப்பர் அரும்பதவுரையாசிரியர். தன் திருமுகத்தை மறுத்துக் கூறியதனை மாதவி வசந்தமாலையினிடத்துக் கேள்வியுற்று என்பார் நாட்டார் (ப.306)

**5.3. பெண்டிரும் உண்டியும் இன்பம் என்று ஊர்காண் காதை அடி 39**

இவ்வுலகத்து, மகளிரும் உணவுமே இன்பம் தரத்தக்க பொருளாம் என்று கொண்ட அறிவிலார் என்பர் நாட்டார் (ப.328).

பெண்டிரும் உண்டியும் என்பவற்றை ஆகுபெயரான் இன்பமும் பொருளும் எனக் கொண்டு அதற்கேற்பப் பிரிதல், புணர்தல் என்பவற்றை இரண்டுக்கும் ஏற்றிப் பொருள் கூறிச் செல்வார் அடியார்க்கு நல்லார் என எடுத்துக் காட்டுகிறார் (ப.328).

**6.1. இலக்கணக் குறிப்பு**

6.1.1. விண்புலம் போயது - போயஅது என்பதன் விகாரமுமாம்

போலும் - ஒப்பில் போலி (சொல்-சூ.278) (பக்கம் - 5)

கேட்டி - முன்னிலை ஒருமை வினை எதிர்காலம் பற்றியது (அடி-38). நள்இருள் கிடந்தேன் - நளி என்னும் உரிச்சொல் ஈறு திரிந்தது. நளி - செறிவு நள்ளென்னும் ஓசையுமாம் (ப. 10)

**முடிகெழுவேந்தர்**

கெழு என்னும் சாரியை ல ன என வரூஉம் புள்ளி இறுதிமுன் என்னும் சூத்திரத்து 'அன்ன மரபின் மொழியிடைத் தோன்றி' என்பதால் இகர ஈற்றின் முன் வந்தது. (அடி-42)

அருளுக என்பதன் அகரம் தொக்கது. விழவொடு சாந்தி செய்ய- சாந்தி செய்து விழவெடுத்தலால் என மாறுக. இடத்து நிகழ் பொருளின் தொழில்கள் இடத்தின் மேல் நின்றன.

(உரைபெறு கட்டுரை) (ப.19)

**ஆடித்திங்கள் அகவையின்**

அகவை - ஏழனுருபு. அகவயின் என்பதன் போலியுமாம் (ப. 20)

சினவேல் - இலக்கண வழக்கு (ப. 30)

**பல்வகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்து**

விலக்கினின் - விலக்குறுப்போடு - வேற்றுமை மயக்கம் (ப.53) (அரங்கேற்று காதை அடி - 13). நாளால் - வேற்றுமை மயக்கம் நலந்தரு நாளால் (ப. 84)

ஆர்வ நெஞ்சமொடு கோவலற்கு - உருபு மயக்கம் - கோவலனை (அந்தி மாலை) (ப. 64)

செயவென் எச்சங்களை எழுதாள் முதலிய எச்சங்களால் முடித்து, அவற்றைக் கையற்ற என்னும் பெயரெச்ச வினையான் முடிக்க. (ப. 98)
வெற்றிவேல் மன்னற்கு உற்றதை ஒழிக்கென
ஒழிப்பாய் என - ஒழிக்கென - விகாரம். நிவந்தோங்கு - ஒரு பொருள் இருசொல் (இந்திரவிழா அடி - 104) (ப. 119).

அலவல் - அலவலை என்பதன் விகாரம்
(இந்திரவிழா அடி - 129) (ப. 121)

கொடுகொட்டி - கொடுங்கொட்டி விகாரமாயிற்று
(கடலாடு, அடி - 43) (ப. 142)

திமில் வாழ்நர் சீறூர்க்கே - சீறூரின் கண் - வேற்றுமை மயக்கம்
(கானல் வரி - 11ஆம் பாடல்) (ப. 174)

விரிதரு, மிடைதரு - என்பவற்றில் தரு துணை வினை - ஏகாரங்கள் எண்ணுப் பொருளன. (பாடல் 15) (ப.175)

பீடும் எவ்வமும்
உம்மைகள் எண்ணும்மையும் சிறப்பும்மையுமாகும்.
இழவல் - அல் எதிர்மறை; மகன் எனல் என்புழிப் போல.
(கானல் வரி - பாடல் 19) (ப. 177)
தீங்கதிர் - திங்கள் ஆகுபெயர் (கானல் வரி - பாடல் 28) (ப.181)

''நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர
மெய்ப்பை புக்கு விலங்கு நடைச் செலவிற் கொலைக்கள -
அடி 106-107''

விலங்குநடை என்பதற்கு விலகி நடக்கும் நடை என்று பொருள் தருகின்றனர் உரையாளர். இது பொருத்தமில்லை எனத் தோன்றுகிறது. மதர்த்து நடக்கும் நடை எனலாம்.

வருதீர் ஐய - பன்மை ஒருமை மயக்கம் (ப.382)
இடைக்குல மடந்தை - முன்னிலையிற் படர்க்கை வந்த வழுவமைதி
(ப. 362)
வீதி மறுகு - ஒருபொருட் பன்மொழி (ப. 382)
அறியான் - முற்றெச்சம் (ப.383)
சிலம்பு காணிய வந்தோர் இவர்என - காண்பதற்கு வந்தனர்
(அடி 159)
காணிய - செய்யிய என்னும் வினையெச்சம் (ப.387)
காட்டுமின் - சொல்லெச்சம் (ப.387)
இலக்கண முறைமை - இலக்கணமும் முறைமையும். உம்மைத்தொகை
(ப. 404).

இறுமென் சாயல் - என்கோயாம் - சொல்லுவோமோ?
என்குமோ எனும் பன்மை என்கோ எனத் திரிந்து வந்தது.
பன்மை ஒருமை மயக்கம் எனினும் அமையும்.
(ப. 406) (ஆய்ச்சியர் குரவை - 1)

கஞ்சனார் - செறலின்கண் வந்த பால் மயக்கம்

அவல, மிசைய - பலவின்பாற் பெயர் (கட்டுரை காதை, 186-187)
ஆரங்கண்ணி என்பதில் ஆர் அம்முச்சாரியை பெற்றது.(ப. 485)
பொதுஇல் பொதியில் என மரீஇயற்று.

**மன்பெரும் பீடிகை**

மன் மிகுதிப் பொருட்டு. மன் கழிவின் கண் வந்தது என அடியார்க்கு நல்லார் கூறுவது பொருந்தாது. (ப.7)

அரைசு - போலி (ப.11)
அடிகள் - அண்மை விளி. (ப.11)

திருவின் செய்யோள் - திருவாகிய செய்யோள்
இன் சாரியை அல்வழிக்கண் வந்தது.
பூவர் - ஆர் நெடில் குறுகியது (ப.180)
நாம் என்னும் உரிச்சொல்லின் ஈறு திரிந்து நாமவேல் என ஆயிற்று.
நென்னல் - நெருநல் என்பதன் மரூஉ. (ப.180)

பிற்பாடு - ஒரு சொல் (ப.300)
கேட்டீமின் - கேண்மின்; வினைத் திரிசொல் (ப.418)
கேட்டைக்க - கேட்டை என்னும் வினையசைச் சொல் ஈற்று வியங்கோள் விகுதி பெற்றுக் கேட்க எனும் பொருள் ஆயிற்று. (ப.418)

உறுவன் - அன் விகுதி தன்மைக் கண் வந்தது. (ப.922)
விட்டாள் எறிந்தாள்- விட்டாள் முற்றெச்சம் (ப. 448)
குலக்கு - அத்துச் சாரியை தொக்கது. (ப. 494)

நின்னாட்டியாங்கள் நினைப்பினும் அறியோம் / நினைப்பினும் என்னும் உம்மை கண்ணாற் கண்டறியாமையே அன்றி என எச்சப் பொருள் தந்தது. (காட்சிக் காதை - அடி 62) (ப. 514)

அரிமா, கரிமா - இருபெயரொட்டு
(கால்கோட்காதை - அடி 188) (ப.547)

வதுவை - மணமாலை - ஆகுபெயர்
(நீர்ப்படை - அடி 26) (ப. 562)

ஈரைஞ்ஞூற்றுவர் - நூற்றுவரை என இரண்டாம் உருபு விரிக்க
(நீர்ப்படை அடி - 128) (ப. 571)

'கவண்விடு புடையூஉக் காவல் கைவிட'

கவண் கற்களை விடுத்துப் புடைக்கின்ற காவலினைக் கைவிடுவதால் - விடு என்பதனை விடுத்து என எச்சமாகவும் புடையூ என்பதனைப் புடைத்தல் எனத் தொழிற்பெயராகவும் கொள்க.
(நீர்ப்படை - அடி - 218) (ப. 577)

வான் எய்த - வான் எய்தும் படி செயவன் எச்சம் காரியப் பொருட்டு,
பெயர்ந்தேன் - பெயர்ந்தேனாய் முற்றெச்சம் (நீர்ப்படை) (ப. 566)

நாள் விடூஉ - வாழ்நாளை விட்டு (நீர்ப்படை-அடி-102)
விடூஉ - வினையெச்சம் (ப. 569)

கறிவளர் சிலம்பில் துஞ்சும் யானையின்
சிறுகுரல் நெய்தல் வியலூர் எறிந்த பின் (நடுகற் - அடி. 114-115)

யானையினையுடைய வியலூர் - சாரியை நிற்க உருபும் பயனும் தொக்கன. (நடுகற் காதை, ப. 596)

ஐயம் தீர்காட்சி - கவுந்தியடிகள்
எங்கோ மடந்தையும் ஏத்தினாள். (ப.628)
உம்மை சிறப்பும் எச்சமுமாம்

**நாடு பெருவளம் சுரக்க**

நாடு வளம் சுரக்க என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேல் ஏற்றப்பட்டது. (வரம்தரு காதை - அடி 6) (ப. 635)

நல் நித்திலத்தின் பூண் நலஞ்சார் பவளக்கலை - முத்தாகிய பூணினை அணிந்து பவளமாகிய மேகலையை உடுத்து

(கானல் வரி - பாடல் 37) (ப. - 185)

என்பன வேற்றுமைத் தொகையும் பண்புத் தொகையுமாம்.

தேவர்காள் - தீர்ம். இர் - முன்னிலைப் பன்மை விகுதி. தீர்ம்-தீரும் என்பதன் ஈற்றுமிசை உகரம் கெட்டது. கிடந்தாளுக்கு - கிடந்தாளை. உருபு மயக்கம் பெறுக கணவனோடு என்றாள். (கனாத்திறம் - அடி 14) (ப.213)

கணவனைப் பெறுவாயாக என வாழ்த்தினாள்.

கணவனோடு - வேற்றுமை மயக்கம் (கனாத்திறம்-அடி44)(ப.216)

ஏழகத் தகரும் எகினக் கவரியும் (ஆட்டுக் கிடாயும் மானும்) ஏழகத்தகர் எகினக்கவரி - இருபெயரொட்டுப் பண்புத்தொகை

(நாடு காண் காதை -அடி 5) (ப.228)

உருவும் குலனும் உயர்பேர் ஒழுக்கமும்
உம்மைகள் சிறப்பும்மை (ப.232) (அடி 46)
கொண்ட இந்நெறிக்கு (வழியின் கண்)

இந்நெறிக்கு என்பது உருபு மயக்கம் (ப.233)
மோ - முன்னிலையசை (அடி 65)

'தாழ்தரு துன்பம் தாங்கவும் ஒண்ணா' நமக்கு வரும் துன்பம் நம்மால் பொறுக்கவும் முடியாது. இம்மைக்கண் அன்றி மறுமையில் நரகத்தில் உறும் துன்பமும் தாங்கவொண்ணா எனப் பொருள் தருதலின் தாங்கவும் என்னும் உம்மை எச்ச உம்மை. (அடி 93) (பக். 235 - 236)

பழிப்பருஞ் சிறப்பின் வழிப்படர் புரிந்தோர்
படர் - செல்கை. முதனிலைத் தொழிற்பெயர் (ப.236)
புரிந்தோர் - வினைப்பெயர் (அடி 101) (ப. 236)
பணிந்தனர் - முற்றெச்சம் (நாடுகாண் - அடி 212-213) (ப.246)

சென்றோர் – வினைப்பெயர்
காமனும் தேவியும் போலும் – ஒப்பில் போலி
(நாடுகாண் – அடி 220) (ப.246)
ஊர் நடுவில் – ஊர் மன்றத்திலே
நடுவூர் என்பது முன்பின்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை
(வேட்டுவ வரி – அடி 11) ப. 280)
‘மறக்குடித் தாயத்து’
ஈண்டு அத்து அல்வழிக் கண் வந்ததென்க (அடி 14) (ப. 280)
படப்பை – தோட்டப்பயிர் – ஆகுபெயர் (அடி 23)
தந்தனர் ஏந்தினர் – முற்றெச்சம் (ப. 282)
‘விலைப்பலி உண்ணும் மலர்ப் பலி பீடிகை
பெயரெச்சம் இடப்பெயர் கொண்டது (ப. 282)
‘மதியின் வெண்தோடு சூடும் சென்னி’
மதி – ஈண்டுப் பிறை
இன்சாரியை அல்வழிக்கண் வந்தது (அடி 54) (ப. 283)
வளையுடைக் கையில் சூலம் ஏந்தி
ஏந்தினவள் – ஏந்தி – வினைமுதற் பொருள் உணர்த்தும் விகுதி
புணர்ந்து கெட்டது (அடி 60) (ப. 284)

நாகநாறும்....... முன்றிலே.....
முன்றிலின் கண்
ஐயும் கண்ணும் அல்லாப் பொருள் வயின்
மெய்யுருபு தொகா இறுதியான
என்ற விதியால் கண்ணுருபு இறுதியில் தொக்கது.
‘எயினர் எயிற்றியர் முன்றில் நிறைந்தன’
எயினர் – தன்மையிற் படர்க்கை வந்த வழுவமைதி
(பாடல் 17) (ப. 291)
இன்சாரியை அல்வழிக்கண் வந்தது (அடி 54) (ப.283)
துடியொடு.... என்ற பாடல்.........
இது உகுபலி முக மடையே
இது பலி – இக்கடன் கொள்க என்பது சொல்லெச்சம் (பாடல் 19)
ஊதுலைக் குருகின் உயிர்த்தனள் கலங்கி
உயிர்த்தனள் – முற்றெச்சம் (பெருமுச்செறிந்து) (அடி 45) (ப.304)
வேனிற்கு அலர் களைந்து
வேனிற்கு – வேனிலாள் (வெயிலாள்) – உருபு மயக்கம்
காட்டியதாதலின் கைவீடலியான் – வினைத்திரிசொல் (அடி 85) (ப. 307)

நுதல்விழிநாட்டம் - வினைத் தொகை
(ஊர்காண்காதை - அடி 7) (ப.324)
நறுமலர்மேனி - ஆகுபெயர் (அடி 18) (ப. 326)
குறுகிய கண்களை உடைய சாளரங்கள் (அடி 101)
குறுங்கண் - ஆகுபெயர் (அடி 101) (ப. 333)
வால்வெண் - ஒரு பொருட் பன்மொழி (ப. 340)
நுழைநுண் - ஒருபொருள் இருசொல் (அடி 168) (ப. 341).
அழுவாள் - வினைப்பெயர் (ப. 427)
இருந்தைக்க - இருக்க - வினைத்திரிசொல் (ப. 428)
விரைஇய - பலவின்பாற் பெயர்; மூன்றன் உருபு விரிக்க
(வழக்குரை காதை, ப.434)
இறைமுறை பிழைத்தோன் - வினைப்பெயர் (ப. 434)
(வழக்குரை காதை)
காய்த்திய பொற்றொடி ஏவ - செய்யிய என்னும் வினையெச்சம் (ப. 449)
(வஞ்சின மாலை - அடி 55)
குறு நடைப் புதல்வரொடு - புதல்வரை உருபு மயக்கம்
(அழற்படுகாதை - அடி 129) (ப. 460)
முன்னிரையீயாள், நிலையீயாள் -நில்லாள்
வினைத்திரிசொல் (ப. 471)
சின் - இடைச்சொல் (கட்டுரை காதை - அடி 24) (ப. 471)
குறைத்த செங்கோல் - குறைத்த எனும் பெயரெச்சம்
செங்கோல் என்னும் ஏதுப்பெயர் கொண்டது.
(கட்டுரை காதை - அடி 52) (ப. 474)

## மேகலையில் இலக்கணக் குறிப்பு

பதிகம் அடி

சம்பு என்பாள் - சம்பு வென்பாள். வடசொல்லாகலின் உடம்படுமெய் பெற்றது (பதிகம். அடி 8)

அகத்தியன் தனாது கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை - கவிழ்த்த என்னும் பெயரெச்சம் காரியப்பெயர் கொண்டது. காவிரி முன்னரே உள்ளதாயின் இடப்பெயர் கொண்டதாம். (பதிகம் அடி 11-12)

கொண்டாங்கு, கேட்டீங்கு என்பவற்றில் ஆங்கு, ஈங்கு என்பன அசைகள் (பதிகம், அடி 16 &19)

| | | |
|---|---|---|
| தொழுதனள் | - | முற்றெச்சம் (பதிகம், அடி.26) |
| கவல் | - | கவலுதல் (ப.அ.52) முதனிலைத் தொழிற்பெயர் |
| பாத்து | - | பகுத்து என்பதன் மரூஉ (ப.அ.64) |
| ஈத்தது | - | வலித்தல் விகாரம் (ப.அ.64) |
| உண்கண் | - | ஆகுபெயர் (ப.அ.77) |
| வீடு | - | விடுதல் (ப.அ.80) முதனிலை திரிந்த தொழிற்பெயர் |
| நன்பொருள் | - | நன்மை என்பதன் ஈறு கெட்டது (ப.அ.87) |
| ஓங்குயர் | - | ஒருபொருட் பன்மொழி (1:1) |
| நேர்ந்தது | - | வினைப்பெயர் (1.9) |
| கூற்றுக்கண் | - | கண் அசைநிலை (1.30) |
| நன்கு அறிந்தீர் | - | அறிந்தீர் ஆகி என வினையெச்சம் ஆக்குக. (பக்.20) (1.67) |
| புனிற்றாப் பாய்ந்த | - | பாய்ந்த புண். பெயரெச்சம் |
| வயிற்றுப் புண்ணினாள் | - | காரணப் பொருட்டாயது (காதை 5 அடி 46) |
| வைத்தோர் | - | முற்றெச்சம் (3.70) |
| கொண்ம், உண்ம் | - | கொள்ளும், உண்ணும் என்னும் ஏவல் முற்றுக்களில் ஈற்றுமிசை உகரம் மெய்யோடும் கெட்டது (3:103, 105) |
| வெண்பலி சாந்தம் | - | வெண்பலியாகிய சாந்தம் எனக்கொண்டு வல்லொற்று விகாரத்தால் தொக்கது என்றுமாம் (காதை 3 அடி 108) |
| மந்தி காண்பன | - | காண்டல் எனத் தொழிற் பெயருமாம் (காதை 4, அடி 6) |
| மருகற்கு | - | முன்னிலையிற் படர்க்கை (4:108) |
| பணிந்தனள் | - | முற்றெச்சம் (6:12) |
| நின்றீர் | - | வினைப்பெயர் (6:15) |
| கொன்றனள் | - | முற்றெச்சம் (6:100) |

| | | |
|---|---|---|
| ஈமச்சுடலை | - | இருபெயரொட்டு (6:129) |
| காத்து ஓம்பிடும் | - | ஒருபொருட் பன்மொழி (6:156) |
| கெடும் | - | செய்யும் என்னும் சொல் ஏவலில் வந்தது (காதை 6 அடி 185) |
| துயிலிடை | - | உருபு மயக்கம் (7:16) |
| புகுந்த | - | கால வழுவமைதி (7:28) |
| தோன்றும் | - | முற்று (7:25) |
| காட்டிய | - | செய்யிய என்னும் வினையெச்சம் (7:94) |
| புகுந்ததை எல்லாம் | - | ஒருமையிற் பன்மை (7:28) |
| அரற்றினன் அழுதனன் | - | முற்றெச்சம் (8:37) |
| மீமிசை | - | ஒருபொருட் பன்மொழி (8:48) |
| உரைத்ததை | - | ஐ சாரியை (9:10) |
| இன்பத்து | - | சாரியை நிற்க உருபு தொக்கது (9:36) |
| பிறப்பும் | - | உம்மை இறந்தது தழீஇய எச்சப்பொருளது (9:66) |
| போன்ம் | - | ஈற்றுமிசை உகரம் கெட்டு மயக்க விதியின்மையால் லகரம் திரிந்து வந்தது (10:47) |
| பீடிகை | - | பீடிகையால் மூன்றன் உருபு தொக்கது (11ட15) |
| துயர் எவ்வம் | - | ஒருபொருட் பன்மொழி (10:62) |
| வாழ்வோர்க்கெல்லாம் | - | வாழ்வோர் எல்லோருள்ளும், வேற்றுமை மயக்கம் (11:95) |
| கண்டேன் | - | கண்டு முற்றெச்சம் (12:40) |
| உறா | - | ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம் (12:87) |
| குமரி ஆடிய | - | செய்யிய என்னும் வினையெச்சம் (13:7) |
| இதனொடு | - | உருபு மயக்கம் (13:55) |
| புறங்காத்து ஓம்ப | - | ஒருபொருட் பன்மொழி (13:14) |
| ஆட்டி அலைக்கும் | - | ஒருபொருட் பன்மொழி (13:46) |
| மக்களும் மாவும் | - | திணை விரவிச் சூழ்ந்தன என அஃறிணை முடிவுபெற்றன (14: 24-25) |

| | | |
|---|---|---|
| விடா | - | விடாவாய் எச்சம் (14:25) |
| எழூஉம் | - | எழுப்பும் - பிறவினை (14:26) |
| போம் | - | ஏவற்பன்மை (14:37) |
| ஒலியரவம் | - | வினைத்தொகை (14:60) |
| கண்டன | - | காணப்பட்டன. செயப்படு பொருளை.... வழக்கியற் மரபே என்பதனால் போந்த வழுவமைதி (15:30) |
| உறூஉம் | - | உறுவிக்கும் - பிறவினை (15:84) |
| நாற்றம் | - | ஆகுபெயர் (16:66) |
| திருவின் செய்யோள் | - | திருவாகிய செய்யோள். இன்சாரியை அல்வழிக்கண் வந்தது (16:34) |
| உறா அது, வழா அது | - | உறாமல், வழுவாமல்- எதிர்மறை எச்சங்கள் இனிதிருப்ப என்னும் பிறவினை கொண்டு முடிந்தன. |
| அருந்திறல் | - | ஆகுபெயர் (16:63) |
| இருந்தேன் | - | முற்று (16:64) |
| வேண்டுவ கொடும் | - | செய்யும் என்னும் வாய்பாட்டு ஏவல் (16:77) |
| இட்டது | - | வினைப்பெயர் (ப.228) (17:13) |
| காணிய | - | செய்யிய என்னும் வாய்பாட்டு ஏவல் (16:77) |
| வந்தேன் | - | எச்ச முற்றுமாம் (17:24) |
| விடாஅ | - | எதிர்மறை வினையெச்ச முற்று (18:68) |
| எய்யாமை | - | உரிச்சொல் (18:85) |
| விடலீயான் | - | வினைத்திரிசொல் (18:85) |
| அடக்கிய | - | செய்யிய (அடக்க) என்னும் வினையெச்சம் (19:32) |
| எறி | - | முதனிலைத் தொழிற்பெயர் (19:32) |
| உடை | - | வினைத்தொகை (19:54) |
| மன்றப் பொதியினுள் | - | இரு பெயரொட்டு (20:79) |
| செல்லல் | - | ஏவல் முற்று (21:27) |
| நீங்கா | - | நீங்காவாய், வினையெச்ச முற்று (21 : 27) |
| மனக்கு | - | அத்துச்சாரியை தொக்கது (22:28) |
| மனக்கு இனிதாக | - | பன்மை ஒருமை மயக்கம் (22:18) |

| | | |
|---|---|---|
| மடவரல் | - | முன்னிலைப் பெயர் (22:65) |
| புதல்வரும் தாரார் | - | எச்ச உம்மை (22:136) |
| உற்றதை எல்லாம் | - | ஒருமை பன்மை மயக்கம் (23:90) |
| தொல் முது | - | ஒருபொருட் பன்மொழி (24:1) |
| கீழால் | - | உருபு மயக்கம் (25:169) |
| தோன்றுதல் | - | தொழிற் பெயர் |
| போலும் | - | ஒப்பில் போலி |
| பசிதின | - | தின என்றது இலக்கண வழக்கு |
| உயர்ந்தோங்கு நிவந்தோங்கு | - | ஒருபொருட் பன்மொழிகள் |
| செய, விழிக்க | - | வியங்கோள் |

## 6.2. அணிநலம்

சிலம்பு மற்றும் மேகலையில் இடம்பெற்றுள்ள பல்வேறு அணிகளை எளிமையாக விளக்கியுள்ளார் நாட்டார். ஒரு சில எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.

காவிரி நாடன் திகிரிபோல (மங்கல, அடி 5)
-இது தொழில் பற்றிய உவமம், (ப. 23)
கதிர் ஒருங்கிருக்கும் காட்சி (மனையறம், அடி 30)
உலகின் அருந்ததி - இல்பொருள் உவமம்
-இல்பொருள் உவமம்.
குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த (மனையறம், அடி 58)
-இல்பொருள் உவமம்

திங்கள் முத்து என்பன காதலும் நலனும் நிலைக்களனாகத் தோன்றிய பண்புவமத் தொகை. ஆகுபெயர் என்பாரும் உளர்.
(அடி 71, 72) (ப. 41)

குறுமுயல் ஒழித்த திங்கள் முகமும் கூந்தலும்- இதன்கண் அற்புத உவமை, தற்குறிப்பேற்ற உவமை, ஐய உவமை உள்ளன.
(இந்திரவிழா, அடி 204, 207) (ப. 127)

கொற்றவை முதலியோர் போல்வாள் ஆயினும் அவர்கள் அல்லள் என்றமையின் இஃது உண்மையுவமை என்னும் அணியாகும்.
(வழக்குரை காதை, ப. 435)

அலவன் துணையோடு ஆடுதல் போல யானும் தலைவியோ டாடி இன்புறுமாறு நீயே கூட்டுவித்தல் வேண்டும் என்னும் குறிப்பினால் அலவனை நோக்கி என்னையும் நோக்கிப் போன என்றாள் என்க. இது குறிப்பு நுட்பம் என்னும் அணியாகும். (கானல் வரி ப. 182)

செய்ய கரியவன் என்றது விரோதம் என்னும் அணி குறித்து நின்றது. (ஆய்ச்சியர் குரவை) (ப.411)

'இருநில மடந்தைக்குத் திருமார்பு நல்கி' அவனைப் பணிந்தென்பார் இருநில மடந்தைக்குத் திருமார்பு நல்கி என்றார். இது பரியாய அணி (ப. 480).

**மேகலையில் உவமை அணி**

மாதர் நின்கண் போதெனச் சேர்ந்து
தாதுண் வண்டினம் மீதுகடி செங்கையின்
அஞ்சிறை விரிய அலர்ந்த தாமரைச்
செங்கயல் பாய்ந்து பிறழ்வன கண்டாங்
கெறிந்தது பெறாஅ திரையிழந்து வருந்தி
மறிந்து நீங்கும் மணிச்சிரல் காண் என.(காதை 4–அடி 19–24)

'நின்னுடைய அழகிய கண்களை நீலமலர் என நினைந்து தாதுண்ணுமாறு அடைந்த வண்டினங்களை அகற்றுகின்ற நின் சிவந்த கையைப் போல் மலர்ந்த தாமரை மலரிலே பாய்ந்து பிறழ்வனவாகிய செங்கயல்களைக் கண்டு அழகிய சிறகு விரியுமாறு அப்பொழுதே பாய்ந்து அம் மீன்களைப் பெறாமல் இரையை இழந்து வருந்தி மீண்டும் நீங்குகின்ற நீலமணி போலும் சிச்சிலியைக் காண்பாயாக என்று உரை எழுதி, விளக்கத்தில் முகம் தாமரைக்கும், கண் செங்கயலுக்கும், கை சிரலுக்கும் உவமை. பொருளே உவமம் செய்தனர் மொழியினும், மருளறு சிறப்பின் அஃது உவமம் ஆகும் என்பதால் பொருள்கள் உவமையாகக் கூறப்பட்டன என்கிறார் (ப.57).

**பரியாய அணி**

குணதிசை மருங்கின் நாள்முதிர் மதியமும்
குடதிசை மருங்கின் சென்றுவீழ் கதிரும்

வெள்ளிவெண் தோட்டொடு பொற்றோ டாக
வெள்ளறு திருமுகம் பொலியப் பெய்தலும் (5:119–122)

என்ற அடிகளுக்கு மதியமும் கதிரும் முறையே வெள்ளித்தோடும் பொற்றோடுமாகத் திருமுகத்திற் பெய்தலும் என்று குறிப்புரை எழுதியுள்ளார் உ.வே.சா. இதையே விரித்து எழுதும் நாட்டார் எனவே அந்திப் பொழுது வந்தமை பெற்றாம். இது பரியாய அணி என்கிறார் (ப.80).

## உவமை அணி

சக்கரவாளக் கோட்டத்தினி முதல் 8 அடிகளுக்கு விளக்கம் தரும்போது சான்றோர் குற்றம் விளங்கும் தோற்றம் போலக் கதிர் மண்டிலம் மறுநிறம் கிளரத் தண் கதிரைப் பால் சொரிவதுபோல் இடையிடைச் சொரிய என்க என விளக்கியுள்ளார் (ப.91) பொருளே உவமம் செய்தல் என்ற தொல்காப்பியப் பொருளதிகார உரையை மேற்கோள் காட்டியுள்ளார்.

ஓடுமழை கிழியும் மதியம் போல
மாட வீதியின் மணித்தேர் கடைஇ (4:75-76)

என்ற அடிகளுக்கு விளக்கம் தரும் உ.வே.சா. கிழிதற்குக் காரணமாகிய மதியம் எனப் பொருள் தந்து கலை நிரம்பினமையின் உதயகுமாரனுக்கு மதி உவமையாயிற்று என்கிறார். பின் சிந்தாமணிப் பாடல் ஒன்றனை மேற்கோள் காட்டி, மாடங்கட்கு மழையையும், தேருக்கு மதியத்தையும் உவமையாக்கினும் பொருந்தும் என்கிறார்.

நாட்டார் மாடங்கட்கு மழையும் தேருக்கு மதியமும் உவமை என்கிறார். மதியினை உதயகுமாரனுக்கு உவமையாக்கலுமாம் என்றெழுதி இதற்கு மதியம் போலக் குறுக என்றியைக்க என்கிறார்.

## உருவக அணி

அழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும் (6:101)

அழலாகிய வாய் என உருவகம் (ப. 96) என விளக்கியுள்ளார் நாட்டார்.

## ஐய அதிசயம்

புயலோ குழலோ கயலோ கண்ணோ
குமிழோ மூக்கோ இதழோ கவிரோ
பல்லோ முத்தோ (6:122-124)

முகிலோ அன்றிக் கூந்தலோ, கயல் மீனோ அன்றிக் கண்ணோ, குமிழம்பூவோ அன்றி மூக்கோ, உதடோ அன்றி முருங்கை மலரோ, பற்களோ அன்றி முத்துக்களோ என்று உரை எழுதி, இஃது ஐய அதிசயத்தின்பாற்படும் (ப.98) என்கிறார்.

வஞ்சப் புகழ்ச்சி

நின் உயிர் கொன்றாய் நின் உயிர்க்கு இரங்கி
பின்னாள் வந்த பிறர் உயிர் கொன்றாய் (25:172-173)

என்ற அடிகளுக்கு பிறர் உயிர் விடுவதற்குக் காரணமானமையின் பிறருயிர் கொன்றாய் என்றது. இது பழிப்பது போலப் புகழ்தலின் வஞ்சப் புகழ்ச்சி என்னும் அணியாகும் (ப.381) என்கிறார் நாட்டார்.

7. மேற்கோள் காட்டும் திறன் - சிலம்பு

மேற்கோள் காட்டும் நூல்கள்

தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், வெண்பாமாலை, திவாகரம், பிங்கலந்தை, கல்லாடம், எட்டுத்தொகையில் நற்றிணை, ஐங்குறுநூறு நீங்கிய பிற நூல்கள், பத்துப்பாட்டுள் மலைபடுகடாம் நீங்கிய பிற நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி, திரிகடுகம், பிற்கால நீதிநூல்களில் மூதுரை, அறநெறிச்சாரம், காப்பியங்களில் மேகலை, சிநதாமணி, பெருங்கதை, கம்பராமாயணம், பரஞ்சோதி, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்; சம்பந்தர் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், வில்லிபாரதம், திருவள்ளுவமாலை, வளையாபதி, சூளாமணி, பட்டினத்துப் பிள்ளையார் புராணம், ஆத்திரையன், கனாநூல், கலிங்கத்துப்பரணி முதலியவை நாட்டார் மேற்கோள் காட்டியுள்ள நூல்கள் ஆகும்.

மனையறம் = அடி 74

தேனே - யாழின் நரம்பிற்குஆகுபெயர் என்னலுமாம். 'நரம்பார்த்தன்ன இன்குரல் தொகுதி' என்றார் நக்கீரனாரும். (திருமுரு. அடி 212) (ப. 41)

அலை நீராடை மலைமுலை யாகத்து
ஆரப் பேரியாற்று மாரிக் கூந்தல் (காதை 5) (அடி 1-2)

கடலாகிய ஆடையினையும் மலையாகிய முலையினையும் அம்முலையையுடைய மானிடத்துப் பெரிய யாறாகிய முத்து வடத்தினையும் என்று விளக்கி

மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணிமுலைத் துயல் வரூஉம் ஆரம் போலச்
செல்புனல் உழுந்த சேய்வரல் கான்யாற்று

என்றார் பிறரும் என மேற்கோள் காட்டியுள்ளார். (ப. 109)

வாளும் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து (சிறு பாண் - 1-3)

என்ற அடிகளை விளக்கும் போது

ஆசிரியர் தொல்காப்பியனார் குடையும் வாளும் நாள்கோள் என உழிஞைத் திணையுட் கூறியுள்ளார். வெண்பா மாலையுடையார் வஞ்சித் திணைக்கும் உழிஞைத் திணைக்கும் இவ்விரு நாட்கோளும் கூறியுள்ளார். கரிகாலன் மேற்சென்றது வஞ்சியாகலின் இளங்கோவடிகள் பன்னிருபடலத்தையும் தழுவி இச்செய்யுளை இயற்றினார் என்று கொள்ளுதல் வேண்டும். (ப.118)

தன் மூவா இளநலம் காட்டி (கனாத்திறம்) (மூத்தல் இல்லாத இளையநலம் என்ற அடியை விளக்கும்போது

மணங்கமழ் தெய்வத்திளநலம் காட்டி திருமுரு அடி 260 -

என்ற அடியை மேற்கோள் காட்டியுள்ளார் -1

இறந்த பிறப்பின் எய்திய எல்லாம்
பிறந்த பிறப்பிற் காணாயோ நீ
(கவுந்தி - காடுகாண் காதை. அடி 156-157)

என்ற அடிகளை விளக்கும்போது

இறந்த பிறப்பில் தாம் செய்த வினையைப்
பிறந்த பிறப்பால் அறிக - பிறந்திருந்து
செய்யும் வினையால் அறிக இனிப்பிறந்து
எய்தும் வினையின் பயன் (அறநெறி. 59)

என்பதனால் அறிக என எடுத்துக் காட்டுகிறார்.

ஆறிடை அத்தத்து இயங்குநர் அல்லது
மாரி வளம் பெறா வில்லோர் உழவர்
(காடு காண் காதை, அடி 209 - 210)

என்ற அடிகளை விளக்கும்போது

வானம் வேண்டா வறனில் வாழ்க்கை
நோன்ஞாண் வினைஞர் - (அகம். 186)

எனவும்

கானுயர் மருங்கிற் கவலை யல்லது
வானம் வேண்டா வில்லேர் உழவர் (அகம். 193)

எனவும் அகநானூற்றில் வந்திருத்தலை எடுத்துக் காட்டுகிறார்.

அருமணி இழந்த நாகம் போன்றதும்

என்ற அடியை விளக்கும்போது,

அருமணி இழந்தோர் நாகம் அலமருகின்ற தொத்தாள்
(சீவக. 1508)

என்ற சிந்தாமணி அடியை எடுத்துக் காட்டுகிறார்.

**ஊர்காண் காதை**

வருபுனல் வையை மருது ஓங்கு முன்துறை (அடி. 72)
என்ற அடியின் விளக்கத்தில்

'திசை திசை தேனார்க்கும் திரு மருத முன்துறை' (கல்.26)

வருபுனல் வையை வார்மணல் அகன்துறை
திருமரு தோங்கிய விரி மலர்க்காவின் (அகம் 36)

தீம்புனல் வையைத் திரும்மருத முன்துறையால்

என்ற பாடல்களை (பரி. 22 அடி 45) மேற்கோள் காட்டுகிறார். மணிமேகலை மேற்கோள் பல இடங்களில் ஆளப்பட்டுள்ளது.

**அடைக்கலக் காதை**

சாவகர் எல்லாம் சாரணர்த் தொழுது ஈங்கு (அடி 161)
என்ற அடியை விளக்கும்போது

தருமம் சாற்றுஞ் சாரணர் தோன்ற
................................
சிந்தை விளக்கிற் றெரிந்தோன் ஆயினும் (சிலப்.10.163-167)

எனக் கூறியமை காண்க என 10ஆம் காதை அடிகளை எடுத்துக் காட்டியுள்ளார்.

### மேற்கோள் காட்டுதல் (மேகலை)

'பொருள்புரி நெஞ்சிற் புலவோன் கோயிலும்' (20:5)

என்ற அடிக்கு விளக்கம் தரும்போது பொருள் - வாய்மை, பொருள்சேர் புகழ் என்பதிற் போல என்கிறார் (ப.277)

நாகங்கிடந்த புற்றளை புகுவான் போல என்ற அடிக்கு விளக்கம் தரும்போது (காதை 20 98-99) புற்றடங் கரவிற் புக்கொளித் தடங்கினன் என முன்னும் 'அரவம் பை விரித்தென எழுந்து' எனப் பின்னும் வருவதனை எடுத்துக்காட்டியுள்ளார். வார்தல் போகல் ஒழுகல் மூன்றும் நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள என்ற தொல்காப்பிய உரியியல் நூற்பாவையும் மேற்கோள் காட்டியுள்ளார். (ப.282).

### ஒப்பீடு காட்டுதல்

1.இந்திரவிழா ஊரெடுத்த காதையில் 52 அடிகளில் இளங்கோவடிகள் கூறியிருக்கும் புகார் நகர இயல்புகளோடு மணிமேகலையில் (காதை 28 அடி 29-72) நாற்பத்து மூன்று அடிகளில் சாத்தனார் கூறியிருக்கும் வஞ்சிநகரின் இயல்பு பெரும்பாலும் ஒத்திருப்பது அறியற்பாலது என ஒப்புமை காட்டியுள்ளார்.

(மணிமேகலை 28 29:72)

2.பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
(இந்திரவிழா அடி 169)

என்ற அடியை விளக்கும்போது,

தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடி (திருவாசகம் சாழல் - 3) என்பதனானும் அறிக எனக் காட்டியுள்ளார்.

மாமுது முதல்வன் என்பதை விளக்கும்போது (அடி 174)

முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
(திருவெம் - 9)

நன்றாய்ந்த நீள் நிமிர் சடை முதுமுதல்வன் வாய்போகா

(புறம் 166)

ஆகிய பாடலடிகளை ஒப்பிட்டுள்ளார்.

திறவோர் உரைக்கும் செயல் சிறந்து ஒருபால்

(இந்திரவிழா அடி 181)

என்ற அடியை விளக்கும்போது

ஆறறி மரபின் அறிந்தோர் செய்யுமின்

.............................................

புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்

(காதை 1 அடி 5,6-58)

என்னும் அடியை எடுத்துக்காட்டியுள்ளார்.

நாடுகாண் காதை அடி 41

மதுரை மூதூர் யாதென

என்ற அடி விளக்கத்தில்

நீண்டமுடி வேந்தன் அருள் எய்தி நிறை செல்வம்

.............................................

யாண்டையது கானென விசைத்ததும் இசைப்பாய்

(கம்ப. சுந்தர காண்டம்)

என்ற கம்பராமாயணப் பாடலை ஒப்புமை காட்டியுள்ளார்.

## காடு காண் காதை

விதிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக் கோடியுடுத்து விளங்குவில் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போல
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
நலம்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ ஆடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும் (அடி 43-57)

என்ற அடிகளை விளக்கும்போது

ஞாயிறும் திங்களும் சக்கரத்திற்கும் சங்கிற்கும் உவமை. அவற்றிடை நின்ற மேகம் ஆழிசங்கேந்திய நெடியோற்குவமை. மின், வில், பொலம்பூ வாடைக்கும் ஆரத்திற்கும் உவமை என்கிறார்.

பருவம் வாய்த்தலின் இரு விசும் பணிந்த
இருவேறு மண்டிலத் திலக்கம் போல
நேமியும் வளையும் ஏந்திய கையாற்
கருவி மின்னவிர் இலங்கும் பொலம் பூண்
அருவி யுருவின் ஆரமொடு அணிந்த நின்
திருவரை அகலம் (பரிபாடல் 13, 7-12)

என்னும் பரிபாடற் பகுதியோடு ஒத்து நோக்கி மகிழத்தக்கது என்கிறார்.

### காடுகாண் காதையில்

'முல்லையும் குறிஞ்சியும்.... பாலை என்பதோர் படிவம்' கொள்ளும் என்பதை விளக்கும்போது திருதொண்டர் புராணப் பாலை வருணனையை எடுத்துக் காட்டுகிறார்.

(பெரியபுராணம், திருக்குறிப்புப் பாடல் 15)

### புறஞ்சேரியிறுத்த காதை

வாரல் என்பன போல் மறித்துக் கைகாட்ட (அடி. 190)

என்ற அடி விளக்கத்தில்

ஈண்டு நீ வரினும் எங்கள் எழிலுடை எழிலி வண்ணன்
பாண்டவர் தங்கட் கல்லாற் படைத்துணையாக மாட்டான்
மீண்டு போகு என்று அந்த வியன் மதிற்குடுமி தோறும்
காண்டகு பதாகை யாடை கைகளாற் தடுப்ப
(வில்லி பாரதம், வாசுதேவன் - 6)

என்ற பாடலை எடுத்துக் காட்டியுள்ளார்.

ஆய்ச்சியர் குரவையில் உள்ள எருதுகள் குறித்த பாடல்களோடு முல்லைக் கலித்தொகைப் பாடல்களை ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

நுண்பொறிவெள்ளை (கொளு, பாடல் 4)

என்பதோடு

நுண்பொறி வெள்ளை (கலி. 101)
செம்மறு வெள்ளை (கலி.15)
பழிதீர்ந்த வெள்ளை (கலி. 104)

ஆகிய அடிகளை ஒப்பிட்டுள்ளார்.

**கட்டுரை காதை**

கறைப்படு மாக்கள் கறை வீடு செய்ம்மின் (அடி 127) என்ற அடியை விளக்கும்போது,

சேரா மன்னர் சினம் அழுங்க உறையுங்
கோட்டமும் உடன் சீமின் என்புழி (சீவக. 306)

நச்சினார்க்கினியர் இவ்வாறு உரைத்தமை காண்க என எடுத்துக்காட்டியுள்ளார். (ப. 481)

**ஐயமாக உள்ளதைப் போலும் எனல்**

உரைபெறுகட்டுரையில் வெற்றிவேற் செழியன் பற்றிக் குறிப்பிடும்போது சாத்தனாரால் புறத்திலே பாடப்பெற்ற நன்மாறன் என்பான் இவனே போலும் என்கிறார். (ப. 19)

**அழற்படுகாதையில்**

உரக்குரங் குயர்த்த வொண்சிலை உரவோன் என்னும் அடி இடைச்செருகல் போலும் (ப.459) என்கிறார்.

**பின் உள்ளது காட்டுதல்**

வண்தமிழ் மறையோற்கு வான் உறை கொடுத்த
திண்திறல் நெடுவேல் சேரலன் காண்கென
(கட்டுரை காதை 63/64)

என்ற அடிகளை விளக்கும்போது

இக்காப்பியத்துள்ளும் நான்மறையாளன் செய்யுட் கொண்டு மேனிலை உலகம் விடுத்தோன் ஆயினும் (காதை 28 அடி 37-38) எனப் பின் இவ்வேந்தன் குறிக்கப்படுதல் அறியற்பாற்று என்கிறார். (பல்யானைச் செல்கெழு குட்டுவன் (ப. 476)

மாநீர் வேலிக் கடம்பொறிந்து இமயத்து
வானவர் மருள மலைவிற் பூட்டிய (காதை 25 அடி 1-2)

என்ற அடிகளை விளக்கும்போது,

கடற் கடம்பு எறிந்த காவலன் வாழி
விடர்ச்சிலை பொறித்த வேந்தன் வாழீ

(காதை 23 அடி 83)

எனக் கடம்பெறிந்தமையும் சிலை பொறித்தமையும் இந்நூல் உள்ளும் பின்னர்க் கூறப்படுதல் அறியத்தகும் என எடுத்துக்காட்டியுள்ளார்.

(சிலப் 25:1.3. 28.135.136)

7.2. மணிமேகலை உரையில், தொல்காப்பியம், கல்லாடம், திவாகரம், வெண்பாமாலை, புறநானூறு, அகநானூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை, பரிபாடல், குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம், முல்லைப்பாட்டு, திருமுருகாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, நெடுநல்வாடை, திருக்குறள், திரிகடுகம், பழமொழி, நாலடியார் கார்நாற்பது, ஏலாதி ஆகிய கீழக்கணக்கு நூல்கள்;

சீவகசிந்தாமணி, பெருங்கதை, கம்பராமாயணம், சூளாமணி, நீலகேசி, பெரியபுராணம், சிலப்பதிகாரம் ஆகிய காப்பியங்கள்.

திருவாசகம், சம்பந்தர் தேவாரம் ஆகிய பக்திப் பனுவல்கள், கலிங்கத்துப்பரணி ஆகிய நூல்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

7.2.1. பதிகத்தில் இடம் பெற்றுள்ள காவிரிப்பாவை ஆகாய கங்கை குறித்து விளக்கும்போது (அடி 16-17) பரப்புநீர்க் காவிரிப் பாவை தன் புதல்வர் என்புழி, காவிரிநீர் கங்கைநீர் ஆதலிற் கங்கைப் புதல்வரைக் காவிரிப் புதல்வர் என்றார் என, அடியார்க்கு நல்லார் கூறியதும், தொல்காப்பியர் பாயிர உரையில் கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கி என நச்சினார்க்கினியர் கூறியதும் ஈண்டு அறியற்பாலன (ப.6) என உரைகளிலிருந்து மேற்கோள் தந்துள்ளார் நாட்டார்.

### 7.2.2. சங்க இலக்கிய மேற்கோள்கள்

பளிக்கறை காதையில் இடம் பெற்றுள்ள மதம் பிடித்த யானையின் செயல் குறித்த அடிகளை (பக். 35-44) விளக்கும்போது மதுரைக்காஞ்சியுள் இடம் பெற்றுள்ள மதயானை குறித்த அடிகளை (376-383) எடுத்துக்காட்டியுள்ளார். (ப. 59)

மழைவளம் தரூஉம் அழலோம் பாளன்

(காதை 5 அடி 34)

என்ற மணிமேகலை அடியை விளக்கும் நிலையில்,

மழைக்கரு வுயிர்க்கும் அழல்திகழ் அட்டினு
மறையோர் ஆக்கிய ஆவுதி நறும்புகை (காதை 10 அடி 143-144)

என்ற சிலப்பதிகார அடிகளைப் பொருத்தமாக மேற்கோள் காட்டியுள்ளார். இவ்வாறே,

கணவிர மாலை கைக் கொண் டென்ன
நிணம் நீடு பெருங்குடர் கையகத்து ஏந்தி
(காதை 5 அடி 47-48)

என்ற அடிகளை விளக்கும்போது,

நிணவரிக் குறைந்தவதர் தொறுங்
கணவிரி மாலை யிடூஉக் கழிந் தன்ன
புண்ணுமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர் (அகம். 31)

என்ற அகநானூற்றுப் பாடல் அடிகளை மேற்கோள் காட்டியுள்ளார்.

சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதையில் (அடி 66-70) கோங்கலர்க்குப் பாலையுடைய பொன் தட்டையும் மாங்கனிக்குக் கிளியையும் மயிலுக்குப் பெண்ணையும் உவமைகளாகக் கூறியுள்ளார் சாத்தனார்.

மாங்கனிக்குக் கிளி அகநானூற்றின் 37ஆம் பாடலிலும், பெண் ஒருத்தி பொன் தட்டில் பாலை ஏந்திக் கிளியை உண்பிப்பது மருதக்கலிப் (பாடல் 7) பாடலிலும் வந்திருப்பதைப் பொருத்தமாக மேற்கோள் காட்டியுள்ளார் (ப.264) நாட்டார்.

### 7.2.3. திருக்குறள் மேற்கோள்

சான்றோர் தங்கண் எய்திய குற்றம்
தோன்றுவழி விளங்கும் தோற்றம் போல

என்ற அடிகளுக்கு (3-4) குடிப்பிறந்தார்கண் விளங்கும் குற்றம் விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து என்ற திருக்குறளைக் காட்டியிருப்பது சிறப்பாக உள்ளது.

### 7.2.4. காப்பிய மேற்கோள்கள்

காம்பு அன தோளி கனா மயங்குற்றனை
(காதை 21 அடி 110)

என்ற அடிக்கு,

தெய்வ மயக்கினும் கனாவுறு திறத்தினும்,
மைய லுறுவார் மனம் வேறாம் வகை
ஐயம் அன்றி இல்லை என்றலும்
(மணி. காதை 27 அடி 281-283)

என்ற மணிமேகலை அடியையே மேற்கோள் காட்டியுள்ளார்.

நற்றவ முனிவரும் கற்றடங்கினரும் (அடி 74)

என்ற அடியை விளக்கும் நிலையில் மறுமை கருதித் தவம் செய்தலைத் தவம் என்றும் வீடு கருதிச் செய்தலை நற்றவம் என்றும் வழங்குதல், நற்றவம் செய்வார்க்கிடம், தவஞ் செய்வார்க்கும் அஃதிடம் என்னும் சிந்தாமணியினாற் (பா. 76) பெறப்படுதலின் ஈண்டு நற்றவ முனிவர் என்று விதந்தது பயன் கருதாது தவம் முயலும் முனிவரை என்க என்கிறார் நாட்டார் (ப. 395).

'தெய்வம் காட்டும் திப்பிய ஓவிய' (தெய்வத்தால் எழுதப்பட்ட)

என்ற அடிக்கு 'மதனற்கும் எழுத வொண்ணாச் சீதை' என்ற அடியைக் காட்டியுள்ளார்.

வகைவரிச் செப்பினுள் வைகிய மலர்போல (காதை 4 அடி 68)

என்ற அடிக்கு உ.வே.சா. போலக் குறுந்தொகை, கலித்தொகைப் பாடல்களை மேற்கோள் காட்டுவதோடு

வேயாது செப்பினடைத்துத் தமிவைகும்
தீயாடி சிற்றம்பலம் அனையாள்

எனக் கூடுதல் மேற்கோள் காட்டியுள்ளார் நாட்டார்.

அவள் வழூஉம் பின்முறை அல்லது என்முறை இல்லை (அடி 73)

என்ற அடியை விளக்கும்போது முறை எனப்படுவது கண்ணோடாது உயிர் வெளவல் (கலி. நெய்தல் 16) என்றார் பிறரும் என எடுத்துக் காட்டியுள்ளார்.

### பக்திப் பாடல்கள் மேற்கோள்

வரம் தர வந்த இந்திரனிடம் ஆபுத்திரன் குறித்து வெள்ளை மகன் போல விலாஇற நக்கு என வரும் அடிக்கு, வெள்கினேன், வெள்கி நானும்

விலாவிறச் சிரித்திட்டேனே என்ற திருநாவுக்கரசர் தேவாரத்தை எடுத்துக் காட்டியுள்ளார்.

துன்ப நோன்பு இத்தொடர்ப்பாடு அறுத்தாங்கு (துன்பம் உழந்து செய்யும் கன்மம், விரதமுமாம்) என்ற அடிக்கு விரதமே பரமாக வேதியரும் சரதமாகவே சாத்திரம் காட்டினர் என்ற திருவாசகப் போற்றித் திருவகவல் அடிகளை மேற்கோள் காட்டியுள்ளார்.

**உ.வே.சா. உரையில் உள்ள சில மேற்கோள்களைத் தவிர்த்தல்**

அக்கினி தேவன் சப்தரிஷி மனைவியரை விரும்ப அவன் மனைவி சுவாகாதேவி அருந்ததி ஒழிந்த அறுவர் உருவம் எடுத்து வேட்கை தணித்தாள் என வியாச பாரதம் ஆரணிய பருவம் 6ஆம் அத்தியாயத்தில் வரும் கருத்தை எடுத்துக்காட்டியுள்ளார் உ.வே.சா. இம் மேற்கோளைத் தவிர்த்துள்ளார் நாட்டார்.

துயிலெழுப்பிய காதையில் 75-76ஆம் அடிகளை விளக்கும்போது புதல்வரைப் பெற்ற மகளிர் பத்தாம் நாள் நீராட வேண்டும் என்பது ஆவஸ்தம்ப கிருதயத்தின் 15ஆம் கண்டம் 8ஆம் சூத்திரத்திலும் மற்றொரு நூலிலும் சொல்லப்பட்டுள்ளது என்கிறார் உ.வே.சா. இம் மேற்கோளையும் தவிர்த்துள்ளார் நாட்டார்.

எனவே வடமொழிப் புராண மேற்கோள்களைக் காட்டுவதில் நாட்டார்க்கு விருப்பம் இல்லை என்பது புலனாகிறது.

**8. சொற்பொருள்**

சொற்களின் பொருளைத் தெளிவுபடுத்த, சொற்கள் சிலவற்றிற்குத் தனியே பொருள் தந்துள்ளார். ஒரு சில எ.டு.

| | | |
|---|---|---|
| புகார் | – | ஆற்றுமுகம் |
| விறல் | – | பெருமை |
| பூ | – | அழகு |
| அதிர்வு | – | நடுக்கம் |
| திறம் | – | கற்பு |
| அமளி | – | பள்ளி |
| பரதர் | – | வணிகர் |

| | | |
|---|---|---|
| சகடு | - | உரோகிணி |
| நலம்பாராட்டுநர் | - | ஒப்பனை செய்வார் |
| மங்கலவணி | - | இயற்கையழகு |
| பட்டடை | - | அடிமணை |
| கேழ் | - | நிறம் |
| ஒளிவட்டம் | - | சந்தனம் உறைக்கும் வட்டக்கல் |
| இறை | - | கடமை, வரி |
| பாரதி | - | பைரவி |
| குறுநர் | - | பறிப்பவர் |
| மறுகு, முடுக்கர் | - | குறுந்தெரு |
| அஞ்ஞை | - | அன்னை |
| கண்டிகை | - | கண்டசரம் - கழுத்தில் அணியும் அணி |
| தலைக்கீடு | - | போலிகாரணம் |
| பொதிவாய் | - | கட்டுவாய் |
| கேவணம் | - | கல்லழுத்துங்குழி |
| கன்னகம் | - | அகழும் கருவி |
| சில்லை | - | இழிவு |
| கோடி | - | புதிய ஆடை |
| பட்டாங்கு | - | உண்மை |
| பட்டிமை | - | வஞ்சத்தன்மை |
| வாதுவர் | - | குதிரைப்பாகர் |
| மறுதரவு | - | மீட்சி |
| படலை | - | இலை மாலை |
| குடாஅடி | - | வளைந்த அடி |
| ஓவர் | - | ஓத்தாளர் |
| நீரணி மாடம் | - | பள்ளியோடம் |
| வட்டிகை | - | சித்திரம் |
| புதவம் | - | கதவு |
| வழிநாள் | - | மறுநாள் |
| விந்து | - | புள்ளி |
| குணில் | - | குறுந்தடி |
| அறைபோதல் | - | கீழறுத்தல் |
| நாவலம் | - | நாவால் வரும் வெற்றி |
| அழல் | - | கார்த்திகை |
| மா[illegible] கல மடந்தை | - | மங்கலாதேவி |
| தொகுப்பு | - | விதைப்பு |

முரி - சிதறிய ; ஒளி விடும்
குரல் - பூங்கொத்தை இடத்தே உடைய கூந்தல்
உருப்ப - முதிர ; வெகுள.

## 9. பாட வேறுபாடு காட்டுதல்

9.1.1. ஆவியங் கொழுநர் அகலத் தொடுங்கிக்

காவிஅம் கண்ணார் களித்துயில் எய்த - நாட்டார்
(அந்தி மாலை, அடி. 45-46)

'காவிஅம் கண்ணால் களித்துயில் எய்த' என்று பாடமோதி மார்பிடத்தே கண்களைப் பொருந்த வைத்து என்பர் அடியார்க்கு நல்லார் - (ப. 97) நீலோற்பல மலர் போன்ற அழகிய கண்களை உடைய மகளிர் என்று பொருள் எழுதுவார் நாட்டார்.

2. அரைஇருள் யாமத்தும் பகலும் துஞ்சான் (அந்தி மாலை, அடி 81) என்ற பாடங்கொண்டு இருள்மிக்க நள்ளிரவிலும் ஒரு மாத்திரைப் பொழுதும் துயிலானாய் என்று பொருள் எழுதுவார் நாட்டார். (ப. 100)

துஞ்சார் என்று பாடமோதித் 'துஞ்சாராம்படி' என்றுரைப்பர் அடியார்க்கு நல்லார் (பக். 100)

அரையிருள் - இரண்டாம் யாமம்
யாமம் - ஓர் யாமம்
பகல் - அரையாமம் என்பர்
அடியார்க்கு நல்லார்.

இக் கருத்து பொருந்துமேற்கொள்க என்கிறார் நாட்டார்.(ப.100)

பகல் - ஒரு மாத்திரைப் பொழுது (ப.100)

3. வார்ஓலி கூந்தற் பேரியற் கிழத்தி (மனையறம், அடி 84) என்பது நாட்டார் கொண்ட பாடம்.

நீண்ட தழைத்த கூந்தலையுடைய பேரியற் கிழத்தி எனப் பொருள் தருகிறார் நாட்டார். எனவே கூந்தலைப் பேரியற் கிழத்தி எனப் பிறர்கொண்ட (உ.வே.சா.பதிப்பு) பாடம் பொருந்தாது (ப.43) என்கிறார்.

4. மல்லல் மூதூர் மகிழ்விழாக் காண்போன் (கடலாடு அடி 34) என்ற அடிக்கு வளம் பொருந்திய அம்மூதூரில் தேவரும் மகிழும் விழாவைத் தானும் காண்கின்றவன் (ப. 140) எனப் பொருள் தருகிறார். மணிவிழா என்பது பாடமாயின் அழகிய விழா என்க என்கிறார்.

5. ஆடலும் கோலமும் அணியும் கடைக்கொள (கடலாடுகாதை , அடி 75) எனப் பாடம் கொள்வார் நாட்டார்.

ஆடற்கோலமும் என்று பாடம்கொள்ளும் அரும்பதம் மாதவி பதினோராடலுக்கும் கொண்ட கோலம் என விளக்கியுள்ளார். (ப.147).

6. இடர்புக்கு இடுகும் இடை இழுவல்கண்டாய் (கானல் வரி, பாடல். 17) (இடரிலே கிடந்து மெலியும் இடை) எனப் பொருள் தந்துள்ளார். இடர்புக்கு மின்னிடை என வேறு பாடம் காட்டுகிறார். இவ்வாறு கொள்பவர் உ.வே.சா.

7. கலம் பெறா நுசுப்பினள் என்ற வேனிற் காதை அடியை விளக்கும்போது (ப. 206) கலங்களைப் புனையவும் பெறாத இடையினை உடையாள் என்று பொருள் தந்துள்ளார். பின்னர் கலம் பொறா என்பது பாடமாயின் கலத்தினைச் சுமக்கலாற்றாத (வேனிற்காதை அடி.91) எனப் பொருள் எழுதியுள்ளார்.

8. தந்தைக்கும் தாயர்க்கும் வேண்டும் கடன்கழித்து மேயநாள் (அடி 31-32) என்ற கனாத்திறம் உரைத்த காதை அடியை விளக்கும்போது தந்தை தாயார்க்குச் செய்ய வேண்டிய நீர்க்கடன் முதலியவற்றைச் செய்து முடித்து, தன் மனைவியோடு கூடி வாழ்ந்தபின் ஒரு நாளில் எனப் பொருள் தருகிறார். பின்னர் மேவினான் என்று பாடங்கொண்டு தன்னை மேவினவன் என்று பொருள் தருவர் அரும்பதம் (ப. 215) என்று எடுத்துக் காட்டியுள்ளார்.

9. முதிர்தேம் பழம்பகை முட்டினும் முட்டும் (நாடுகாண் காதை, 73) என்ற அடிக்கு முற்றிய பலாப்பழங்கள் பகை போலாகி மோதுதலையும் செய்யும் (தேம்பழம் - தேனொழுகும் இனிய தெங்கம்பழம் எனலுமாம்) எனப் பொருள் எழுதி,

முட்டினும் முட்டுவர் என்பது பாடம் ஆயின் கழிவோர் பழமாகிய பகையினால் தடைப்படினும் படுவர் (நாடுகாண்காதை, அடி.73) என்க. இப்பொருட்குப் பழப்பகை என்பது பாடமாதல் தகும். அரும்பத உரைகாரர் இப்பாடமே கொண்டுள்ளார் (ப. 234) என்று எடுத்துக்காட்டியுள்ளார்.(234)

10. புறஞ்சேரியிறுத்த காதையில் உள்ள எய்தியது உணர்ந்து ஆங்கு (அடி 96)- அவ்வோலையிற் பொருந்திய வாசகத்தை அறிந்து என்று பொருள் எழுதி, எய்தியது உரைத்து என்று பாடங்கொண்டு தான் போந்த காரணம் சொல்லி என்று பொருள் உரைப்பர் அரும்பதவுரையாசிரியர் (ப.308) என எடுத்துக்காட்டியுள்ளார்.

11. எதிர் எதிர் விளங்கிய கதிர் இளவனமுலை என்ற அடிக்கு விளக்கம் பொருந்திய இளைய அழகிய முலையினையும் என்று பொருள் தந்து (புறஞ்சேரி அடி 163) விளங்கிய எனப் பாடம் கொண்டு ஒன்றையொன்று நெருங்கிய என்று உரைப்பர் அரும்பதவுரை (ப. 314)

12. ஊர்காண் காதையில் உள்ள தண்நறு முல்லையும் தாழ்நீர்க் குவளையும் (அடி 76) என்ற அடிக்கு ஆழ்ந்தநீரிற் பூத்த செங்குவளை மலரும் (ப. 331) என்று பொருள் தருகிறார். பின்னர் தாணீர்க்குவளை என்பது பாடமாயின் தாளையுடைய நீர்மையதாகிய குவளை என்க என்கிறார்.

13. ஊர்காண் காதையில் உள்ள என்றூழ் நின்ற குன்றுகெழு நன்னாட்டு என்ற அடிக்கு (121) வெயில்நிலை பெற்ற நல்ல மலைசார்ந்த என்று பொருள் தருகிறார். என்றூழ் நீடிய என்பது அரும்பத உரையாசிரியர் கொண்டபாடம்.

14. ஊர்காண் காதையில் உள்ள காவியங் கண்ணார் கட்டுரை எட்டுக்கும் நாவொடு நவில, நகைபடுகிளவியும் (அடி 138) என்ற அடிக்கு 'புலவிப் பொருள் பொதிந்த உரையாகிய எண்வகை இடத்திற் பொருந்தி நாவால் நவிலப்படாத' என்று பொருள் தருவார். எட்டு – நெஞ்சு முதலாய எண்வகை இடம் என்பர். கட்டுரை எடுக்குநர் என்று பாடம் கொண்டு வார்த்தை சொல்லப் புகுகின்றவர் என்பர் அரும்பத உரையாசிரியர்.

15. ஊர்காண் காதையில் உள்ள 'ஆயிரத்து எண் கழஞ்சு' (அடி 158), என்ற அடிக்கு ஆயிரக் கழஞ்சு என்பதும் பாடம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

16. 'பூச உருவின் பொலம் தெளித்தனையவும்' (ஊர்காண்) (அடி 188) என்ற அடிக்கு பூசமீனின் உருவினையுடைய பொன்னைக் களங்கமறத் தெளிவித்தாலொத்த புருடராக வர்க்கமும் என்று பொருள் எழுதியுள்ளார். பூசை உருவிற் பொலந்தேய்த்தனையவும் என்று பாடங் கொண்டு பூனைக்கண் போன்று பொன்னைத் தேய்த்தாற் போன்றவை புருடராகம் என்பர் அரும்பதம் என எடுத்துக் காட்டியுள்ளார்.(ப. 342)

17. ஊர்காண் காதையில் உள்ள 'கருப்பத் துளையவும் கல்லிடை முடங்கலும்' (அடி 197) என்ற அடிக்கு நடுவே துளைபட்டனவும் கல்லிடுக்கிற் புக்கு வளைவுற்றனவும் எனப் பொருள் தருவர்.

கல்லுடை முடங்கல் எனப் பாடங் கொண்டு கல்லை உள்ளே உடைய வளைவு என்பர் அரும்பதம். (ப. 343)

18. அடைக்கலக் காதையில் 'தாரன் மாலையன் தமனியப் பூணினன் (அடி 157) என்ற அடிக்கு பூமாலையை உடையனாய், மணி மாலையை உடையனாய் என்று பொருள் தந்துள்ளார். தாரமாலையான் என்று பாடமோதி மந்தார மாலையை உடையவன் எனினும் பொருந்தும் என்கிறார்.(ப. 364)

சாயலன் மனைவி (மாதவன் மொழிப்படி குரங்கினை மக்களைப் போல் ஓம்பினாள். இறந்த பிறகும் அதன் பொருட்டுத் தானம் செய்தாள். அதனால் வாரணவாசி என்னும் நகரத்தில் உத்தரகௌத்தன் புதல்வனாகத் தோன்றி 32 ஆண்டுகள் வாழ்ந்து தேவர் வடிவம் பெற்றாள்.

19. அடைக்கலக் காதை, அடி 179

உத்தர கௌத்தற்கு ஒரு மகனாகி (ப. 366)

உத்தர கௌத்தன் என்னும் ஒருவனுக்கு ஒப்பற்ற புதல்வனாய் 'உத்தரன் கவிப்பன் எனப் பாடமோதி' கவிப்பன் என்னும் வணிகனுக்கு உத்தரன் என்னும் பெயரோடு ஒருமகனாகி எனவும் கவிப்பன் - பசுமறையத் தேடின பொருள் உடையவன் எனவும் உரைப்பர் உளர். (உ.வே.சா) என எடுத்துக்காட்டுகிறார்.

20. கொலைக்களக்காதை அடி 25

வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய் வளைந்த வரிகளையுடைய வெள்ளரிக்காய் என்பர். வால்வரிக் கொடுங்காய் எனப் பாடங் கொண்டு வெள்வரிக்காய் என்பர் அரும்பத உரையாசிரியர் (ப. 378) என எடுத்துக்காட்டுகிறார்.

21. கொலைக்களக்காதை அடி 118

'பத்திக் கேவணப் பசும் பொன் குடைச்சூழ்' என்ற அடிக்கு, பசிய பொன்னாற் செய்த புடைபட்டு உட்கருவையுடைய சித்திரத் தொழிலமைந்த சிலம்பினது தொழில் நுணுக்கம் எல்லாம் எனப் பாடங்கொள்ளலுமாம்.

குடச்சூல் அஞ்சிலம்பொடுக்கி - அகம் 198 என்ற பாடலை மேற்கோள் காட்டுகிறார் நாட்டார் (ப. 384)

22. ஆய்ச்சியர் குரவை (பாடல் 3)

உறிநறு வெண்ணெய் உருகா உருகும்
மறிதெறித் தாடா வருவதொன் றுண்டு

என்ற பாடலுக்கு ஆட்டுக் குட்டிகளும் துள்ளி விளையாடாமல் குழைந்து கிடக்கும் என்று பொருள் எழுதுகிறார்.

உருகுதல் - ஒன்று நெகிழ்தல். மற்றொன்று நெகிழ்ந்து கிடத்தல். உ.வே.சா. இதே பொருள் கொண்டுள்ளார். பின் உருகும் என்ற பாடத்தினை உருகி எனக் கொண்டு உருகி ஆடா எனவும் முடிப்ப. உருகி - மெலிந்து (ப.398) என எடுத்துக்காட்டுகிறார்.

23. துன்பமாலை-காணிகா (அடி 46) என்ற அடிக்கு காண்பாயாக எனப் பொருள் தந்துள்ளார். பின் இக என்னும் முன்னிலையசை இகா எனத் திரிந்தது. காணிகா காணிகா எனப் பாடங்கொண்டு இரண்டும் விரைவின்கண் வந்தன என்பர் அரும்பத உரையாசிரியர்.

24. காட்சிக்காதை - எம்மோரன்ன வேந்தர்க்கு உற்ற (அடி 95) என்ற அடிக்கு எம்மை ஒத்த அரசர்க்கு முறை வழுவுதலால் உண்டாய பழிச் சொல் என்று பொருள் தருகிறார்.

இனி வேந்தற்கு என்பது பாடமாயின் பாண்டியனுக் குண்டாகிய சொல் பிறர் செவிப் புகுதற்கு முன் பெயர்த்தமை உறுக எனக் கருதி எனச் செங்குட்டுவன் உட்கோள் ஆக்குக. வேந்தற்குற்ற என்பது உ.வே.சா.ஏற்ற பாடம் (ப. 518)

9.2. பதிகம் அடி 59

அங்கைப் பாத்திரம் - அகங்கையில் இருந்த பிச்சைப் பாத்திரம் எனப் பொருள் தந்து ஆங்கப் பாத்திரம் என்பதும் பாடம் என்கிறார்.

'தண்மணற் பந்தரும்' என்ற அடிக்குக் குளிர்ந்த மணலையுடைய பந்தர் என்று பொருள் தந்து மணப்பந்தர் என்னும் பாடத்திற்கு மணத்தையுடைய தண்ணீர்ப்பந்தர் என்க (ப. 20) என்கிறார்.

சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதையில் நிலத்தலை நெடுவிளி எடுக்கும் ஓதையும் (அடி 112) (நிலத்தின் கண் பெரிய கடிதலை) என்று பாடம் கொண்டுள்ளார் நாட்டார். நிலைத்தலை என்று பாடம் கொண்டுள்ளார் உ.வே.சா. நிலைத்தலை என்பது பாடமாயின் தன்னிடத்து நிலைபெற்ற என்க (ப. 97) என்கிறார் நாட்டார்.

ஆபுத்திரன் திறம் அறிவித்த காதையில் காப்புக் கடை கழிந்து கணவனை இகழ்ந்தேன் எற்பயமுடைமையிற் (அடி 81-82) என்ற பாடம் கொண்டு காவலின் எல்லையைக் கடந்து கணவனை அவமதித்தேன் , இரவின் அச்சம் உடைமையால் (ப. 138) என்று பொருள் தருவார் நாட்டார். காப்புக்கடை கழிந்து கணவனை இழந்தேன் எறிபய முடைமையின் எனப் பாடம் கொள்வர் உ.வே.சா. நாட்டார் கொண்ட பாடத்தைப் பிறபாடம் என்பார் அவர். எறி பயம் என்பதற்கு அடித்தலால் உண்டாகும் அச்சம் என்பார் அவர்.

'புரப்போன் பாத்திரம் பொழிந்தூண் சுரந்தீங்கு என்ற அடிக்கு (காதை 14 அடி 49) பெய்யப்பட்ட உணவு என்று பொருள் தருகிறார். பின் பொருந்தூண் என்பதும் பாடம் என்று எடுத்துக் காட்டுகிறார். (ப. 194)

இடுசிறை நீக்கி எனப் பாடம் கொள்ளும் நாட்டார் பின் ஈடுசிறை என்பது பாடமாயின் சிறையீடு என மாறுக என்கிறார் (ப.297) இவ்வாறு பாடங்கொள்வர் உ.வே.சா.(ப. 297)

தோன்றல் தகாது ஒழி நீ என சிறை செய்காதையில் பாடம் கொண்டு நீ வெளிப்படுதல் தகாது, இந்நகரை விட்டு நீங்குவாயாக என்று பொருள் தருகிறார். தகாது ஒளி என்பது பாடமாயின் மறைந்து கொள் என்பது பொருளாகும் என்கிறார் உ.வே.சா. இவ்வாறு பாடம் கொண்டுள்ளார்.

'செற்றத் தெவ்வர் தேஎம் தமதாக்கியும்' (அடி 12) என்று சிறைவிடு காதையில் பாடம் கொண்டு பகைமையை உடைய மாற்றாரது நாட்டினைத் தம்முடையதாக்கியும் என்று பொருள் தந்துள்ளார். செற்ற தெவ்வர் என்பது பாடமாயின் வெகுண்டெழுந்த பகைவர் என்க என்று (ப. 333) பொருள் தந்துள்ளார். இவ்வாறு பாடம் கொள்வார் உ.வே.சா.

விழித்தல் ஆற்றேன் என்ற சிறைவிடு காதை அடிக்கு (ப. 337) உயிர் வாழ்தலைப் பொறாமலே என்று பொருள் தந்து, விழத்தல் என்பது பாடமாயின்

இழத்தல் எனப் பிரித்துக் கணவனை இழந்திருத்தலை ஆற்றேனாய் எனப் பொருள் கொள்க (ப. 338) என்கிறார் நாட்டார்.

செற்ற கள்வன் எனச் சிறைவிடு காதையில் (அடி. 81) பாடம் கொண்டு சின்மகனைச் சினந்த காஞ்சனன் (ப. 338) என்று பொருள் தந்துள்ளார். செற்றக் கள்வன் என்பது பாடமாயின் செற்றமாகிய கள்வன் என உருவகம் ஆக்குக என்று விளக்குகிறார் (ப. 338)

25ஆம் காதையில் தூஅறத் துறத்தல் நன்று எனச் சாற்றி என்ற அடிக்கு, பற்றுக்கோடு இல்லையாகத் துறத்தல் நல்லது எனக் கூறி (ப. 376) உள்ளார். துவரத் துறத்தல் என்னும் பாடத்திற்கு முற்றத் துறத்தல் என்று பொருள் கொள்க என்கிறார்.

## தொகுப்புரை

நாட்டார் பொருத்தமான இடங்களில் முன்னோர் உரையை ஏற்று, மறுப்பிற்குரிய இடங்களைத் தகுந்த காரணம் காட்டி மறுக்கிறார். புதிய விளக்கங்கள் சிலவற்றைப் பொருத்தமாகத் தந்துள்ளார். இரட்டுற மொழிதலால் பல இடங்களில் நயமான பொருள் தருகிறார். முன்னோர் தரும் மேற்கோள் பாடல்களோடு தன் ஆழ்ந்த - அகன்ற இலக்கிய இலக்கணப் பயிற்சியால் கூடுதலான மேற்கோள்கள் தந்துள்ளார். குறிப்பாக இலக்கணக் குறிப்புகள் தருவதிலும் அணிநலம் குறித்து விளக்குவதிலும் பேரீடுபாடு காட்டியுள்ளார். சிறு சிறு பாடவேறுபாடுகளையும் சுட்டிச் செல்கிறார். பெரிதும் வடமொழி சார்ந்த மேற்கோளைத் தவிர்த்துள்ளார் என்பது சுட்டத்தக்கது. மேகலையை விட நாட்டாரின் உரைத்திறன் சிலப்பதிகார நூலில் நன்கு வெளிப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் காண வேண்டும் என்பதே நாட்டார் அவர்களின் விழைவாகத் தெரிகிறது.

## பயன்பட்ட நூல்கள்

1. சிலப்பதிகாரம் - ந.மு.வேங்கடசாமி நாட்டார்
இரண்டாம் பதிப்பு (கழகம்)- 1999

2. சிலப்பதிகாரம் - உ.வே.சா. -1950

3. சிலப்பதிகாரம் - பெருமழைப் புலவர்
பொ.வே.சோமசுந்தரனார் - 1977

4. மணிமேகலை - நாட்டார் - முதற் பதிப்பு (கழகம்)
- 1985

5. மணிமேகலை - உ.வே.சா. - 1965